705

[REGI]STERED No. M. 1754.

உ

ஜோதிமயம்.

JEEVANANTHA BODHINI

A HIGH CLASS TAMIL MONTHLY MAGAZINE.

ஜீவானந்தபோதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

மலர் க. Vol. I.	ருத்ரோத்காரி௵ வைகாசிமீ (மேமீ 1923௵)	இதழ் உ. No. 2.

29 JAN 1924

விஷயங்களின் குறிப்பு.

1. கடவுள் வணக்கம்.
2. தமிழின் நிலை.
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்.
4. குமரிகலியின் சூழ்ச்சி அல்ல[illegible]ன் திண்டாட்டம்.
5. கீதா வசனபூஷண மான்மியம்.

6. வேடிக்கைக் கதைகள், 7. சிறுவர்க்கான கதை, 8. அறிவுவிளக்கக் கதை, 9. ஸ்திரீகளுக்கான கதை, 10. பொதுக்கதை, 11. பூனை நண்பன், 12. வைத்திய விஷயம். 13. விகடச்கொத்து, 14. பாலிகா சப்பாஷணை 15. நூதன விஷயங்கள், 16. கல்வியும் சாஸ்திரமும், 17. விவசாயக்குறிப்பு, 18. கைத்தொழிலும் வியாபாரமும் 19. விநோதங்கள், 20. தர்மம் தலைகாக்கும்.

21 விளம்பரங்கள்.

பத்திரிகாசிரியர்:—

தமிழ்ப்பூஷணம், வாசுதேவ ராவ் கேய்க்வார்,

தமிழ்க் கல்வி அபிவிருத்திப் போஷகர்.

1923

Printed & Published by N. T. Rathinavelu Mudaliar,

THANIAMBAL VILASAM PRESS,

1/382, Mint Street, Madras.

இமிடேஷன் டைமண்ட் வைரமோதிரம்.

இந்த மோதிரங்கள் கன்னடியன் கோல்டினால் செய்து இமிடேஷன் டைமண்ட் வைரகற்கள் பதித்து தற்கால நாகரீகத்திற்கேற்றபடி தயார்செய்து சீமையிலிருந்து வரவழைத்திருக்கிறோம் இதிலிருக்கும் கற்கள் சூரியபிரகாசத்திற் கொப்பான பளபளப்பும் ஜொலிஜொலிப்பும் அசல் வைர மோதிரங்களைப் போலிருக்கும் இக்கற்களின் நிறம் எப்பொழுதும் மாறுவது கிடையாது இவை அநேக தனவந்தர்கள் முதல் உபயோக படுத்திவருகிறார்கள் இதை ஒன்று அணிந்துகொண்டால் மிக்க மதிப்பை தரும்.

இதன் விலை ரூபா 1,

A BOON TO SMOKERS.

எலெக்டிரிக் சிகார் லைட் விளக்கு.

இந்த விளக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும் வத்தியும் அதைக் கொளுத்த நெருப்புக்குச்சியும் தேவையில்லை. எலெக்டிரிக் சத்தியினால் எரியும் நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன்படி செய்து மேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கிரத்தை திருப்பினால் திக்கென்று பள பளப்பான பிரகாசத்துடன் எரியும் பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையை கழட்டிவிட்டு பெட்ரோல் எண்ணை போட வேண்டியது.



லைட் 1-க்கு விலை ... ... ரூ. 1 0 0

ஒரே தடவையில் 3-லைட் ... ... ரூ. 2 10 0

ஸ்ரீகாளத்திப் புராணம்.

மூலமும் உரையும்.

மஹாவித்வான் காஞ்சிபுரம் இராமாநந்த யோகிகள் எழுதிய வுரையுடன் புல் கலிகோபயிண்டு விலை ரூபா 2—8—0

வன்னியர் புராணம்

மூலமும் உரையும்.

இந்நூல், மதுரை சுந்தரபாண்டிய வரசன் சமஸ்தான வித்வானாகவிருந்த சைவ கி. வீரப்பிள்ளை என்பவரால் 1089 விருத்தப்பாக்களாகச் செய்யப்பட்டுள்ளது, சிருஷ்டிச் சருக்கம் வில்வலன் வதைச்சருக்கம் முதலாகப் பாயிரமுட்பட 32 சருக்கங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் வன்னியர் சிருஷ்டிக்கிரமம் அவர்கள் அரசாண்ட கதைகள் அவர்களுடைய வெற்றித்திறங்கள் அரசர் உற்பத்திக் கிரமங்கள் முதலானவற்றை விசிதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

புல் கலிகோ பயிண்டு விலை ரூபா 1 8 0

N. T. ஜீவா & கோ.,

1-382, சௌகார்பேட், மதராஸ்.

JEEVANANTHA BODHINI

A High class Tamil Monthly Journal devoted to the discussions of all topics of interest.

ஜீவானந்த போதினி.

SPECIAL FEATURE.

A High Class Tamil Monthly Journal devoted to public welfare and popular education.

RATES OF SUBSCRIPTION

Post Free.

		Inland	Foreign
Yearly	Rs.	1 0 0	1 4 0
Single copy	,,	0 2 0	0 3 0

RATES OF ADVERTISEMENT

1 page	Rs.	7 0 0	per month
½ page	,,	4 0 0	,,
¼ page	,,	3 0 0	,,

Contract rates will be sent on application.

To contributors :— Contributions on subjects relating specially to Agriculture, Trade, Industry and topics of practical interest will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

No money should be paid to any Agent. All remittances and letters etc., must be addressed to the Manager.

Jeevanantha Bodhini Office,

No. 1-382, Mint Street,

Sowcarpet Post, Madras.

ஜீவானந்த போதினியைப் பற்றிய சில முக்கியமான விஷயங்கள்.

நம் நாட்டுத் தமிழ்மக்களின் அறிவ வளர்ச்சிக்கென்றே பிரசுரிக்கப்பட்டு வரும் சிறந்த பல விஷயங்கள் அடங்கிய ஓர் மாதாந்த தமிழ்ப்பத்திரிகை.

தபாற்கூலிஉள்படசந்தாவிகிதம்.

		உள்நாடு	வெளிநாடு
வருஷம் 1-க்கு	ரூபா	1 0	1 4
தனிப்பிரதி	,,	0 2	0 3

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாதம் 1-க்கு	ரூ-	7 0
½	,,	,,	4 0
¼	,,	,,	3 0

கண்ட்ராக்டு விகிதங்களுக்குநேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

வியாச மெழுதுவோர் கவனிக்கவேண்டியவை.

வியாசம் எழுதுபவர்கள் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலான விஷயங்களைப்பற்றி எழுதி யனுப்பலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரேபக்கத்தில் அரைப் பாதியில் எழுதி யிருக்கவேண்டும். கடினமான தமிழ் உதவாது. ஒப்புக் கொள்ளப்படாத வியாசங்களைத்திரும்ப வேண்டுவோர் தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீவானந்த போதினி ஆபீஸ்,

நெ, 1-382, சௌகார்பேட்டை,

சென்னை,

ஸ்ரீமகா பக்த விஜயம் இரண்டாம்பாகம்.

அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராய் ஆதிமத்தியாந்த ரகிதராய் விளங்குகின்ற நமது ஸ்ரீ யெம்பெருமான் திருவடிக்கன்பராகிய சக்குபாய், புரந்தரதாசர், கோராகும்பர், பத்திராசல ராமதாசர், பெரியதாசர், துக்காராம், ஏகநாதசுவாமி, நரசிம்மமேதா, சோகாமேளர், மீராபாய், தாமாஜி, பண்டிதர்போசலபாவா என்னும் பன்னிரண்டு தாசர்களின் பூர்வசரித்திர வரலாற்றை ஆதியோடந்தமாகப் புதைநிதிபோல் சேகரித்து மூந்தி முடிவுபெறாதிருந்த ஐந்து தாசர்களின் சரித்திரத்தையும் பூர்த்திசெய்து இரண்டாம்பாகமாக அச்சிடும்படியாய் அனேக புண்ணியவான்கள் கேட்டுக்கொண்டபடியால் அச்சிட்டிருக்கின்றது. இதை ஒவ்வொருவருங் கண்ணுறுமிடில் ஆவலடங்காது இதிற் கூடிய தாசர்களின் சரித்திரத்தை வாசிக்கும்போதே ஆனந்தமெனும் பெருங்கடல் சுரந்து அமிர்தமூட்டுமென்பது திண்ணம்.

இதன் விலை 1-க்கு ரூ. 3-0-0. ஷெ கிளேஸ் 1-க்கு ரூ. 3-8-0.

மூன்றும்பாகமும், நான்காம்பாகமும் சேர்ந்தது ரூபா. 3-8-0.

மஹா மகிமைபொருந்திய திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த

ஞானவெட்டியான்

மூலமும் உரையும் 1500

இந்த அருமையான நூலானது மகா மகிமைபொருந்தின திருவள்ளுவநாயனாரால் அருளிச்செய்யப்பட்டதென்று யாவரும் உணர்ந்தவிஷயம் ஆனாலும் இந்நூலானது அனேக வருஷங்களாகச் சுத்தமாகப் பதிக்கப்படாமல் பிழையாகவே பதிக்கப்பட்டு வருவதுடன் நல்ல காகிதத்திலும் அச்சிடாமலேயிருந்தது இந்நூற்றாண்டில் கல்வி முதிர்ச்சியின் மிகுதியினால் உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் சுத்தபதிப்பாகவும் நல்ல கடிதமாகவும் நூற்கள் இருத்தல் வேண்டுமென்று விரும்புகிறார்கள், இது யாவருக்கும் சம்மதமான விஷயமேயல்லவா? ஆம் ஜனங்களுக்கு நூற்களிலுள்ள திருப்தி இவ்வளவோடு முடியவில்லை இன்னும் ஒரு திருப்தியும் உண்டு அதுதான் பெரியதிருப்தி (அதாவது தற்காலபேதத்தால் ஜனங்கள் தாய்பாஷை மறந்து அந்நியபாஷையை விரும்புகிறபடியால் அப்பாஷை எப்படி வசனநடையில் வழங்குகிறதோ அப்படியே தமிழ்ப் பாஷையிலுள்ள பாடல்களின் கருத்துகளையும் வசனமாகச் செய்வித்தால் யாவருக்கும் பயன்படுமென்று மெண்ணுவதேயாம்.)

1 சரீரதத்துவம், 2 சரியை, 3 கிரியை, 4 யோகம், 5 ஞானம், 6 பூர்ணநிலை, 7 பொய்க்குமெய்க்குரு, 8 கருவிவரம், 9 வாதவித்தை, 10 வயித்தியவித்தை, 11 முப்பூமுடித்தல் 12 வாசிதாரணை 13 ஆயுள்வளர்க்கும்விதி 14 கற்பமுண்ணும்விதி இன்னும் பல விஷயங்கள் முதலியவைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோலுணர்ந்து அவ்வழியையனுசரித்து அவ்வவ்வழியில் நல்லதேர்ச்சியையடைவதற்கு யாதொரு தடையுமிராது இந்த நூல் எல்லாமதஸ்தர்களும் இதை அவசியம் வாங்கி வாசிக்கக்கூடியதே.

புல் காலிக்கோ பயிண்டு இதன் விலை ரூபா 2 8 0

N. T. ஜீவா & கோ.,

1-382, தங்கசாலை தெரு, சென்னை.

2248

சிவமயம்.

ஜீவானந்த போதினி.

கதைகளையும், கட்டுரைகளையும், நவீனங்களையும்
தன்னகத்தடக்கிக்கொண்டு வெளிவரும்
ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறுமணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு—(குறள்.)

ALL RIGHTS RESERVED.

மலர் I.	ருத்ரோத்காரி வருஷம் வைகாசி மாதம்	இதழ் உ
Vol. I.	May 1923.	No. 2.

கடவுள் வணக்கம்.

வேண்டுதல் வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்
கியாண்டுமிடும்பை யில.

காதமரும்வெண்சங்கக் குழையாய்போற்றி
கைலாயமலைமேய கடலேபோற்றி
சீதமதிக்கொழுந்தணிந்த சடையாய்போற்றி
திரிபுரமுன்நீறெழ சிரித்தாய்போற்றி
பாதமலர்கொடுநமனை யுதைத்தாய்போற்றி
பங்கயத்தோன்தலையரிந்த பரனேபோற்றி
நாதவுருவேதவுரு வானாய்போற்றி
நறுமலர்பூங்குருந்தவன நாதாபோற்றி.

தேனமருங்கொன்றைமலர்த் தாராய்போற்றி
சித்தசனையழற்குணவு செய்தாய்போற்றி
மானமர்செய்மழுவிருகை பொறுத்தாய்போற்றி
வரிசிலையாய்மாமேரு வளைத்தாய்போற்றி
போனகமாவிடமுண்டும் பொலிவாய்போற்றி
பொற்பொதுவில் நின்றுநடம்புரிவாய்போற்றி
ஞானவொளியாய்விளங்கு சுடரேபோற்றி
நறுமலர்ப்பூங்குருந்தவன நாதாபோற்றி.

தமிழ்சுவை எங்கே? தமிழக்கவிகள் எங்கே? தமிழ் புராணிகர்கள் எங்கே ? முக்கியமாய்த் தமிழ்க்காருண்யம் எங்கே ? இவைகள் மறைந்துபோய் உள்ளும்புறம்பும் ஓரேஇருள். எங்கும் இருள். காரிருள். ஓரேபடித்தாய் மூடிக்கொண்டிருக்கிறது. இவ்விதம் இருள் மூடிய தன்மையினால் எதுவும் செய்யத் தவக்கம். எங்கும் செல்ல மயக்கம். எழுந்திருக்கவோ வெனின் இறுக்கம். இனி யெப்படிநாம் தலையெடுக்கமுடியும் என்ற ஏக்கம். இதையெல்லாம் நாம் ஆய்ந்து ஓய்ந்து பார்க்காமல் அதிகமான கேட்டைத்தரக் கூடியதான அடிமைக்கல்வியை யபிவிருத்திசெய்கின்றோமே யன்றி சுகவாழ்வுக்குரியதும், தூய்மையளிப்பதும், வாழ்க்கையில் இன்பம் பயப்பதுமான தமிழ்மொழியைப் புறக்கணித்து உலகவிவகார மின்னதென்றெண்ணாமல் அறிவைத்தாழ்ந்த நிலையில் நிறுத்தி அமரரும் விரும்பும் அமுதமொழியின் அருமையும் பெருமையும் பெறப் போற்றுவோமாயின் அவனியில் ஆதிக்கம்பெற்று அதிமேன்மையாய் வாழ்வோமன்றோ ? இதனை வலியுறுத்த கவிக்கும் புவிக்கும் இறைவனாய் விளங்கிய கொற்கையாளியான அதிவீரராம பாண்டியனான தமிழ் மன்னன் "பெருமையுஞ் சிறுமையும் தான்தரவருமே" என்னும் பொன்னொத்த தமிழ்மொழியினைப் போற்றாதார் எவரேயுளர்? தண்டமிழ்வாணர்கள் மரபினில் தோன்றிய தமிழ்மக்களே! தனித்தமிழ் மொழியினைப்போற்றவும், தமிழ்நூல்களை யன்புடன் ஓதவும், பண்டையநாள்போல் தமிழ் மொழியோங்கவும் இனியேனும் உங்கள் மரபுவிளங்குவதற்கும், தழைத்து ஓங்குவதற்கும், உங்களை ஏமாற்றிப் பொருள்பறிக்கும் போலிப்புலவர்கள் தம் பொய் மொழிகளில் மயங்காவகையில் மேன்மைபெற்று பூவுலகுள்ளளவும் யொன்றாப் பெருமையெய்தி வருமாறும் இனியேனும் மேற்கொள்ளுவீர்களென்று எல்லாம்வல்ல இறைவன் திருவருள்புரியுமாறு இணையடி இறைஞ்சுகின்றாம்.

ஓம் தத் ஸத்.

சிவமயம்

பக்த வசனபூஷணம்.

ஜீவானந்தபோதினி நேயர்காள் !

நமது போதினியில் பலவித நாவல்களும், கீதையும் தொடர்வதாயுத்தேசித்ததில் ஸநாதன தர்மமும், பக்தியும் நம் சகோதரிகள் நன்னெறி கற்குமாறு பதிவிரதா தர்மவிஷயங்களும் பிரசுரிப்பது பயன்தருமென்றும் அறம், பொருள், இன்பம், வீடு பயப்பது கல்வியெனப்படுவதுபோல ஜீவானந்தபோதினியும், சதுர்வித புருஷார்த்தங்களையும் போதிப்பது கருதி இனிவரும் சஞ்சிகைகள் மிகவும் மேன்மையுடைய தன்மையிலிருக்குமென்பதை யறிவித்துக் கொள்ளுகிறும்.

பத்திரிகாசிரியன்.

---

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஆலால சுந்தரர் என்ற பக்தர் கைலாசத்தில் பகவானுக்குத் தொண்டுசெய்திருப்பவர். ஒருநாள் அவர் பூந்தோட்டத்தில் பார்வதி தேவியாரின் சேடிகளான அனிந்தை, கமலினி என்ற பெண்களிருவரையும் பார்த்து அவர்களைக் கலியாணம்செய்துகொள்ள இஷ்டப்பட்டார். அவர்களும் சம்மதப்படவே, மூவரையும் பூமியிற்சென்று வசித்துவரும்படி உமையும் பகவானும் உத்தரவு செய்தார்கள். பகவானை விட்டுப்பிரிய மனமில்லாதவராய் வருந்தி "என் ஐயனே நான் பூமியில் பிறந்தாலும் மயங்காமல் உன்மேலே சித்தத்தை நிறுத்தும்படியாக என்னை ஆட்கொள்ளவேண்டும்" என சுந்தரம் வேண்டிக் கொண்டார்.

திருநாவலூரில் சடையனூர் என்ற பிராமணருக்கும் இசைஞானியார் என்ற அவர் மனைவியாருக்கும் குமாரனுக ஆலால சுந்தரர் பிறந்து நம்பியாரூரர் என்ற பெயருடன் வளர்ந்து வந்தார். பிறகு அவருக்குக் கலியாணம் நடக்கும் சமயம் பகவான் இவரைத் தடுத்தாட்கொள்ள நினைத்து, ஒரு பிராமணக்கிழவராய் அச்சபையில

வந்து, நம்பியூரார் மணத்தைத் தடுத்துச் சபையிலுள்ளவர்களை நோக்கி, 'இந்த நம்பியூரன் என்னுடைய அடிமை. ஆகவே இவனை எனது அதிகாரப்படி நடத்துவேன்' என்றார். நம்பியாரூரனும் இவன் என்ன பித்தம்போலும் என்றான். சபையோர் எல்லாரும் சிரித்து "இதை நம்பத்தகுந்த ஆதாரம் என்ன?" என, கிழவர் தம்மிடமிருந்த அடிமை ஓலையை எடுத்துக் காட்டினார். அதில் "திருநாவலூரி லிருக்கும் ஆதிசைவப் பிராமணராகிய ஆரூரனென்னும் பெயருள்ள நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக் கெழுதிக்கொடுத்த மூறிவோலையாவது, இத் தேதிமுதல் நானும் என் சந்ததியாரும் உமக்குக் கொத்தடிமை செய்ய மனம் வாக்கு ஒத்து எழுதிக் கொடுத்தேன். இதற்கு இதுவே என் கையெழுத்து" எனக் கண்டிருந்தது. நம்பியாரூரருடைய பாட்டனாரது கையெழுத்தையும் சாட்சிகளின் கையெழுத்துகளையும் கண்ட எல்லாரும் ஓலையை ஒப்புக்கொண்டு, நம்பியாரூரர் அடிமை செய்யவேண்டியதே எனத் தீர்மானித்தார்கள்.

நம்பியாரூரரும் 'ஐயரே உமக்கு இவ்வூரில் விடுதி எங்கே' எனப் பணிந்து கேட்க, பகவான் கோவிலுக்கு அவரைக் கூட்டிச் சென்று அங்கே தன் கிழவேஷத்தை மறைத்துக்கொண்டார். நம்பியாரூரர் கிழவரைத்தேடித் திகைத்து நிற்க, பகவான் இடபாரூடராய் உமாதேவியாருடன் காட்சியளித்து, அவரது பூர்வோத்திரத்தைச் சொல்லித் தான் தடுத்தாட்கொண்டதைச் சொன்னார். பிறகு அவரை ஆசீர்வதித்து, பகவானைப் பாடிமகிழ்ந்திருக்கும்படி யருளினார். பித்தனே என்று பகவானைத்தான் அழைத்த காரணமாக, முதலில் அந்தப் பதத்தையே அமைத்து "பித்தா பிறைசூடி" எனத் துவக்கிப் பாடல்கள் பாடித் துதித்தார்

கைலாஸத்தில் ஆலால சுந்தராயிருந்த நம்பியாரூரர் என்ற இவருக்கு இதன் பிறகு சுந்தரமூர்த்தி நாயனார் என்றபெயர் வழங்கலாயிற்று.

சுந்தரர் ஒரு நாள் திரு ஆரூரில் வந்து ஸ்வாமி தரிசனம் செய்து பாடிக்கொண்டிருந்தார், பார்வதி தேவியாரின் சேடிகளில் கமலினி என்பவள் திரு ஆரூரில் பிறந்து, பரவையார் என்ற பெயருடன் கோவில் பணி செய்து வந்தாள். முன்பே நேசித்திருந்தவர்களாதலின், அவர்கள் இருவருக்கும் விவாகம் நடந்தது.

(தொடரும்.)

ஆனல் நமது குள்ளப்பனுக்கோ வெனில் அவ்விதமல்ல. அவன் வீட்டுச்செலவுக்கு வேண்டிய சர்வதானியங்களும் கொடுப்பது வழக்கம். இப்படி மனந்துணிந்து மார்த்தாண்டப்பிள்ளை கொடுப்பாராவெனின், நமது கதாநாயகியாகிய குமுதம் மார்த்தாண்டப்பிள்ளையின் கிட்ட பந்துவின் குமாரி. இவள் இளம்பிராயத்திலேயே இவளது தாய்தகப்பன்மார் றிறந்துபோனர்கள். அச்சமயம் இவளுக்கு வயது ஏழு அல்லது எட்டிருக்கலாம். சிறுவயதிலேயே மிக்க வசீகரமாயிருப்பாள். இவளதுபெற்றோர்கள் இறந்தபின் குமுதத்தைத் தன் நகத்திலேயே கொண்டுவந்துவைத்துப் போஷித்து வந்தார். இவள் பிரபு வீட்டில்வந்து உண்டுடுத்து வளரத்தலைப்பட்டதும், இவளுடனே இவளது அழகும் வளரத்தலைப்பட்டது. இவளுக்கு அழகு வளரவளர, மார்த்தாண்டப்பிள்ளைக்கு குமுதத்தின் மீது சிறிது சிறிதாக காதல் வளரத்தலைப்பட்டது. இப்படி இவளும் பூரண அழகோடு சேர்ந்த மங்கைப்பருவ மெய்தியதும், மார்த்தாண்டப்பிள்ளையும் தன்பால்வளர்ந்த காதலைத்தணிக்க வியலாராகி குமுதத்தின் கையைப்பிடித்து முத்தமிட்டுக் காதலின் விஷயத்தைச் சிறிது சிறிதாகப்புகட்டி யவளுக்கும் அதன்விஷயத்தை யூட்டி யிதன் பயனுக இருவரும் இன்பந்துய்த்துவரலாயினர். இவ்விருவரின் காதலானது நாளாட்டத்தில் குமிக்கும் குவலயமாந்தர் சொல்லுக்கு குறியாயிற்று. (Love is mark for the Remark) இதை யறிந்த மார்த்தாண்டப்பிள்ளையின் மனைவி தனது கணவனுக்கு அபகீர்த்தி வந்தெய்துமென வெண்ணியவளாய், தனது தூரபந்துவும் தன் வீட்டுப் படியாளுமாகிய குள்ளப்பனுக்கு குமுதத்தைக் கொடுத்து கலியாணம் முதலியதை தானே செய்துவிட்டாள். அது முதல் குள்ளப்பனும் குமுதமும், உறையூரின் தென்கோடியில் வசிக்கலாயினர். குமுதம் மார்த்தாண்டப்பிள்ளையின் வீட்டிலிருக்கும்போது சிறிது வாசிக்கப் பழகியிருந்தாள். பிரபுவாகிய மார்த்தாண்டப்பிள்ளைவீட்டுக்கு அடிக்கடி அநேக வித்வான்கள் வருவதும் சத்காலக்ஷேபங்களும், புராண உபந்நியாச முதலியனவும் நடைபெறும். அவ்வமயங்களில் அவர்கள்கூறும் உபமான உபமேயங்களைக் கேட்டு அவற்றை மனதில் பதித்துவரும் அருங்குணம் படைத்திருந்தனள். ஆனல் கற்பு என்பதைப்பற்றி எவ்வளவோ கேட்டிருந்தும் அதை யநுசரிக்கக் கூடாமைக்குக் காரணமென்னவோ அது நமக்கும் அறியக்கூடாமையே. ஆனல் ஒன்றுமட்டும் கூறுதிருக்கக் கூடவில்லை. அஃதியாதெனின் 'விதிவழி மதி' யென்பதே. இத்தகைய சந்தர்ப்ப

ங்களின் பின்னும் மார்த்தாண்டப்பிள்ளை நமது குமுதத்தை மறந்தாரில்லை. அவளுடைய வனப்பு எத்தகையவரையும் வலிக்குங்காந்தத்தினை யொத்தமையே. இடைக்கிடை சில வேளைகளில் குமுதத்தினிடம்வந்து அளவளாவி இன்பநுகர்ந்து செல்வர். இவர் குமுதத்தைக் காண வரும்போது வெறுங்கையுடனும் வருதலில்லை. அவள் மனமகிழும் வண்ணம், காதலையும், கைநிறையும் வண்ணம் நாணயத்தையும் கொண்டு வருவது வழக்கம். இத்தகைய வருவாயேயன்றி குமுதம் வேறுவழியிலும் தனமீட்ட முற்பட்டுத் தனத்தையுதவிவருவாளாகிப் பலவாலிபர் தம்நட்பையும் தனதகத்தொழிந்த புறத்தேபெற்று வருவாள். நமது குள்ளப்பனே கள்ளங்கபடறியாத காட்டுப்பூச்சி. காலையிலெழுந்து போவதும், கடும்பகலில் வீட்டைடந் துண்டிளைப்பாறிப் பின் செல்வதும் மாலையெய்திய பின்னர் தன்வீட்டடைவதுமே தொழிலாக வுடையவன். வேறு விதமான தீயநெறிகளை யறிந்தவனல்லவாதலால் அவனால் இவளது நடத்தைகளைக்கண்டு கொள்ளக் கூடாமையாயிற்று. கண்டா ரொருவரும் காதகியின் வாய்ப்பட்டித்தனத்தைக் கண்டு விள்ளவுமாட்டார். இவ் விதமான குணமுதலியனவுடைய நமது கதாநாயகியின் குணாதிசயத்தையும் சாகசச்செயல்களையும் எவரும் பெற்றிராரென்பதால் குற்றமுண்டாகாதென்றே கொள்ளுதும். இத்தீயவளின் கொடுமையை எவருமறிய வொண்ணுதேனும் கடவுளொருவரால் அறிதற்கியலுமாதலால் அவர் இவளை மன்னித்து விடுவரோ? தெய்வம் மனிதவடிவிலேயே விளங்குகின்றதென்பதைப் பிரேத பாஷையிலும், "தைவம் மாநுஷ்ய ரூபேணும்" என்பதற் கொப்ப இவ்வுலகில் அறியாமையால் அல்லது அகங்காரத்தினால் இயற்றப்படும் குற்றங்களைக் கடவுள் தண்டிக்காம லிருப்பதில்லை. இதை யறியாச் சில போலிமக்கள் சுவாமியாவது பூதமாவது என்று வேடிக்கையாகக் கூறுவதும் தம்தீவினை மிகுந்த மொழிகளையும் செய்கைகளையும் பரப்புவதும் அவர்களின் அறியாமையையே விளக்குகின்றது. அன்பே இன்பம். இன்பமே சிவம் என்னும் உண்மையையறிய இவர்க்கு எங்ஙனம் அறிவுமிகும். இவர்தம் பழக்கமே காரணமாதலால் கேவலமான நிலைமையை யெண்ணி அகந்தைக் கிடங்கொடுத்து அறிவினையறவே ஒழித்துவிடுகின்றனர். இஃதிவர்கள் இயற்கையேபோலும். இன்றேல் உலக இயற்கைபோலும் என்னின் அன்று. அன்று அறியாமை யென்பதுதான் பொருந்தும்.

அதிகாரம் 3.

இது என்ன?

வழக்கம்போல் குள்ளப்பன் மாடுமேய்ப்பதும், வீடுவருவதும் உண்பதும் தொழிலாயிருந்தான். நமது குமுதமோ அவளும் தனது விஷயத்தைச் சரிவர நடத்திவந்தாள். ஆனால் காலம்மட்டும் எப்போதும் ஒரேமாதிரியாயிருப்பதில்லை. மாறிமாறி வருவது உலகத்தினியற்கை. இதுபோலவே நமது குமுதத்திற்கும் குள்ளப்பனுக்கும் என்பது குற்றமாகாது. இவ்விஷயங்களைப்பற்றி வேறு சாஸ்திரிகளையும் புராணிகர்களையும் இன்னும் எவரைக்கேட்டாலும் ஈசுர சங்கல்பம் என்பதைத்தவிர வேறு எதுவும் கூறமாட்டார்கள். ஆனால் எதுவும் வழிதவறி நடப்பது இல்லை. ஆனால் நாம்மட்டும் நினைப்பது வழிதவறியேதான். இதுவெல்லாம் யாருடைய குற்றம் என்பது எவராலும் தெளிதற்கில்லையெனின் ஞானிகளால் நன்கு தெளியப்படும். அவர்கள் மவுனமே உறுதியாகக் கொண்டுள்ளவர்களாயினமையின் ஒருவருக்கும் உரைப்பதுமில்லை. அவர்களை யொருவரும் கேட்பதுமில்லை. தவிரவும் நாகரீகம்மிகுந்த இக்காலத்தில் சந்யாசிகளின் மதிப்பு பாழாய்விட்டது. இதற்குக் காரணம் சோம்பேறிகள் பெருத்து சன்யாசிக்கோலம்பூண்டு அதற்குள்ள மரியாதையைப் பாழாக்கிவிட்டனர். இதுவெல்லாம் காலத்தின் கோலமேயன்றி வேறு கூறுவதற்கில்லையெனின், எதையும் காலத்தின்மேலேற்றிக் குற்றம் சுமத்துவது கூடுமோ எனக்கேள்விபிறக்கும். இது நம்மால் கூறப்படுவதல்ல. நமது ஆன்றோர்களால் கூறப்படுவதுதான். இதையே நன்னூலாரும் "பழையனகழிதலும் புதியன புகுத்தலும் வழுவல், காலவகையினனே" என்றாராயின் நாம் காலத்தின்மேலேற்றுவது குற்றமாகாதன்றோ? குவலயம் என்னும் உலகம் குறித்தற்பாலதேயான விஷயங்களை யுடையதாகுமென்பதும் கூறற்பாற்றேயாம்.

நிற்க, வாசகர்களே! நமது கதாநாயகன் நாயகியிருவர் விஷயம் தெளிவித்தாம். இனி கதையைத் தொடர்வாம்.

நமது குள்ளப்பன் வழக்கம்போல் மாடுமேய்ப்பதும் வீட்டுக் குவருவதும்போல் ஒருநாள் உலகமே தீப்பட்டு தகிப்பதுபோன்ற வேனிற்காலத்தில் பகல் உணவுண்டு செல்லுவதற்குத் தன்னுடன் மாடுமேய்க்கும் தோழரிடம் கூறிவிட்டுத் தான்மட்டும் தனியே புறப்பட்டுவந்தான். வரும்வழியில் வெயிலின் கொடுமையைக் கூற வேண்டுமோ? இவனாலும் தாளமுடியவில்லை. கீழும் மேலும் நெருப்புபோல் சுடுகிறது. நடக்கவும் முடியவில்லை. கால் சுடுகிறது. தலையோ வெடித்துப்போகின்றது. இவனுக்கும் நடக்கவோ முடிய வில்லை. எங்கேனும் சிறிது நிற்கலாமெனிலோ பனைமரத்தைத்தவிர வேறு மரங்களேயில்லை. பனைமரத்து நிழலில் ஒருவனுக்கிருக்கவும் நிழல் கிடைக்காது. இத்தகைய கஷ்டத்தையும் வகித்துப்போகும் குள்ளப்பனுக்கு நரகத்தில் நடப்பதுபோலும், வெயிலின்கொடுமை நரக உபாதைபோலும் மிகுந்த துன்பத்தை யுண்டாக்குகின்றது. இதினின்றும் மீண்டு எப்படி வீடுசேர்வது என்ற எண்ணம் ஏற்பட்டதெனினும் இவைகளை யாராய்ந்து சிந்திக்கலாமென்பதற்கு நிற்க இடமேயில்லை. இவ்விதமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டே வீட்டை யடைந்தான். வேர்வையோ கொட்டுகின்றது. இதைக்கண்டதும் குமுதம் ஓடோடியும் வந்து புருஷனுக்கு ஜலம் கொண்டுவந்து வைத்து ஸ்நானம்செய்வித்து, அவனுக்குப் பிரதிதினம் அன்னம் படைப்பதுபோல் படைத்து உபசாரம் செய்தாள். குள்ளப்பன் உண்டு சிறிது உறங்கினான்.

குமுதத்திற்கு இவன் உறங்குவது இடைஞ்சலாயிருப்பதை யுத்தேசித்து சிறிது நேரத்திற்கெல்லாம் புருஷனை யெழுப்பி நேரமாய்விட்டது. போகவில்லையா? என்று கூறவே குள்ளப்பன் கட்டிச் சுருட்டிக்கொண்டு எழுந்துபோனான். இவனுக்கு மனதிலே ஒரு சந்தேகம். ஏதோ கொண்டுவந்ததுபோலும். அதை மறந்தது போலும் தோன்றிற்று எனினும், ஞாபகத்திற்கு வரவேயில்லை. சிந்தித்துக்கொண்டே சிறிது தூரம் போனான். அச்சமயம் இவன் ஞாபகத்திற்குவந்தது. அதாவது: "ஆம், ஆம். தாத்துக்கோலை வைத்துவிட்டோமே" என்று எண்ணினான். அதுவில்லாவிட்டால் மாலையில் மாடுகள் எப்படிவரும்? இனி நேரே வீட்டுக்குப்போய் அதை எடுத்துக்கொண்டுதான் வரவேண்டுமென்றெண்ணிக்கொண்டே திரும்பினான்.

ஜோதிமயம்.

ஸ்ரீ கிருஷ்ணபரப்ரம்ஹணே நம:

ஸ்ரீ கீதா வசனபூஷண மான்மியம்.

I.

அநாதிமலமுத்தனாய் விளங்கும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவானவர் இக் கீதையை பாரதயுத்தசமயத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்த சமயம் அவனும் அவ்வப்போது ஏற்பட்ட சம்சயங்களை விளக்கும்படி வேண்டியதனாலே இதற்கு "கிருஷ்ணார்ச்சுன சம்வாதம்" என்றும் ஒருபெயர் ஏற்பட்டுளது. இதை பாரதத்தில் பீஷ்மபர்வத்தில் வேதவியாசரால் கூறப்பட்டிருக்கிறது. இது மானிடர்களின் அஞ்ஞானமென்னும் இருளைப்போக்கி பரஞானமென்னும் ப்ரகாசத்தைப் புகட்டுவதால் இதற்கு ஞானசாஸ்திரமென்றும் ஒருபெயர் ஏற்பட்டிருக்கிறது. கீதையை பிராமணர்முதல் சாமான்ய ஜனங்களும் வாசித்து சத்கதியடைய ஏதுவானது. இத்தகைய அருமையும் பெருமையுமுடைய கீதையை சூதபுராணிகருக்கு வேதவியாசரே உபதேசித்திருக்கிறார். ஒருசமயம் சூதமாமுனிவர் சௌனகமுனிவரின் எதிர்ப்பட்டபோது, சௌனகமுனி சூதரைப்பணிந்து, "ஸ்வாமீ! தேவரீர் அடியேனுக்கு பகவத்கீதா மான்மியத்தை அருளிச்செய்யவேண்டு"மென்று வினவ, சூதமுனிவர் சௌனகரை நோக்கி, "ஹே! மஹரிஷே! பகவத்கீதா மான்மியமானது பெருமையிற் சிறப்புடையதாயும், இரஹஸ்யமானதாயும், உத்தமமானதாயு மிருக்கின்றது. ஆனால் நீர் கேட்டதற்காக நான் ஆச்சாரியர் முகமாகக் கேட்டவாறு கூறுகின்றேன். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவினால், பார்த்தனுக்குபதேசித்த கீதை அமுதத்தினும் மேம்பட்டதாயும், சம்சாரமென்னும் சாகரத்தைத் தாண்ட ஒப்பற்ற தெப்பமாயும், விளங்குகின்றது. இதை பக்தியுடன் கேளாதவன் பன்றிக்குச் சமானமாகின்றான். கீதையை அத்தியயனஞ் செய்பவன் மோக்ஷத்தை யடைவான். இதைப் பாராயணஞ் செய்துவரின் சகல வேதசாஸ்திர புராணேதிகாசங்களும் விகசிதமாய் விளங்கும். அரைவாசி கீதையை வாசித்தவர்களுக்கு கோதானபலன் சித்திக்கும். ஆறு அத்தியாயம் வாசித்தவர்களுக்கு சோமயாகபலன் சித்திக்கும்.

மூன்றத்தியாயத்தை வாசிப்பவன் கங்காஸ்நானபலமெய்துவான். நாள் ஒன்றுக்கு இரண்டத்தியாயம் வாசிப்பவன் இந்திரலோகத்தில் ஒரு கற்பகாலம்வரை சுகபோகம் துய்ப்பான். தினம் ஒரு அத்தியாயம் வாசிப்பவன் சிவகணமாகிச் சிவலோகத்தில் நெடுநாள்வசிப்பான். ஒரு அத்தியாயத்தில் அரை அல்லது கால்பாகத்தை வாசிப்பவன் அநிகநாள் ஆதவனது லோகத்தில் வசிப்பான். பத்து அல்லது ஏழு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று அல்லது அரை ஸ்லோகங்களைப் படிப்பவர்க்குப் பத்துகோடிவருடஞ் சந்திரலோக வாசஞ் சித்திக்கும். இஃதன்றியும் மரணசமயத்திற் கீதா அர்த்தத்தைச் சிந்திப்பவர்க்கும், பாராயண சப்தத்தைக் கேட்பவர்க்கும் மோக்ஷமே சித்திக்கும். கிரியைகள் நடத்துஞ்சமயம் கீதா பாராயணஞ் செய்வதனால் சகல குற்றமும் விலகும். சிரார்த்தகாலத்தில் பிதிரர்களை உத்தேசித்து வாசிக்கின் அவர்களுக்கு நரகவிமோசனமாகும். பகவத்கீதையை உள்ளன்போடு பிறருக்குத் தானஞ்செய்யின் அதன்பயனை யளவிடவியலாது. மானிடனாய்ப்பிறந்த நால்வகை வருணத்தாரும் கீதையைப் பாராயணஞ்செய்தலே உத்தமோத்தமம். இன்றேல், அமுதமிருக்க விஷம் உண்பதொக்கும். ஞானம் எங்கும் நிறைந்து பூரணப்படுவதுபோல கீதையும் அஃதேபோல்வது. கீதையையும் கீதார்த்தத்தையும் கண்டு அசூயையும், நிந்தையையுஞ் செய்கிறவர்க்கு நரகமே பிராப்தியாகும். சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்ய மென்பதில் சாயுஜ்யத்தையே யளிக்கவல்லதாய இக் கீதா படனம் சமீபஸ்தானங்களில் நடக்கிறதாகத் தெரிந்தும் சிரவணஞ் செய்யாதவர் நாய், பன்றி, எருமை முதலிய பிறவிகளிற் பிறந்து துன்பமுறுவர். இஃதன்றியும், சௌனகமுனிவரே! கீதைசாமான்யமானதன்று.ஸத்வகுணஸம்பன்னனாய், புருஷோத்தமனாய் லோகோத்தாரணஞ்செய்யும் பகவானாலேயே திருவாய்மலர்ந்தருளப்பட்டதனாலே இது வேதமேயாகுமென்பது மேலோர்கொள்கை. இதனைப் போன்ற பிறிதொருநூல் மானிடர்க்கு உபயோகமானது வேறொன்றுமின்று. இது கூறுவதையே மற்ற பலநூல்கள் ஒவ்வொரு விஷயத்தைமட்டும் கூறும். கீதையோ எல்லாவிஷயத்தையும் தன்னகத்தடக்கிய புதைபொருளாகும். இத்தகைய கீதையை இன்று நீர் கேட்டதனால் உமக்குமெனக்கும் அளவற்றபுண்ணியம் சித்திக்கும்." என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை ஸ்தோத்திரஞ்செய்து தன்காரிய நோக்கிச்சென்றார்.

II.

கீதா பதினெட்டத்தியாய மான்மியம்.

அன்பும் அருளும் நிறைந்த கீதா வாசகர்காள் ! அஷ்டாதச புராணங்களுள் ஒன்ருகிய பதுமபுராணத்தின்கண் மஹாவிஷ்ணுவால் ஸ்ரீலக்ஷ்மிதேவிக்குச் சொன்னதாகப் பரமன் பார்வதிக்குச் சொல்லியதாய் விவரித்திருப்பதில் சில இவண் செப்புதும். சுதன்மாவெனும் அந்தணன் பாபமேலிட்டால் பல ஜன்மங்களெடுத் துழன்று பின் எருதாய்ப்பிறந்து பலவித கஷ்டங்களை யனுபவித்து இறக்குந்தருவாயில் ஒரு தாசி கொடுத்த புண்ணிய பரிபாகத்தினல் பூர்வ ஞானத்தோடும் பிராமணனுய்ப்பிறந்து அவளால் வளர்க்கப்பட்ட கிளி கீதா முதலத்தியாயம் பாராயணஞ் செய்ததனல் முத்தியுமடைந்தான்.

கோதாவரிநதி தீரத்திலுள்ள தேவஸன்மா வென்னும் பிராமணன் காட்டில் வசிக்கும் இடையனல் அக்காட்டிலுள்ள பாறையின் மீது வரையப்பட்டிருக்கும் கீதையின் இரண்டாமத்தியாயத்தை வாசித்ததனலேயே மோக்ஷமடைந்தான்.

செனஸ்தானத்தில் ஒரு பிராமணன் வேடனல் வெட்டுண்டு பைசாசமாகி ஒருமரத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்குஞ் சமயம் அரசகுமாரன் அம்மரத்தினிழலில் தங்கி கீதா மூன்ருமத்தியாயத்தைப்படனஞ்செய்யச் சிரவணித்துப் பைசாச உருவம்நீங்கி மோக்ஷமடைந்ததோடு அவனது பிதிர்க்களும் நரகம் நீங்கி மோக்ஷமெய்தினர்.

தபசியின் தவத்திற்கு விக்கினமியற்றிய தேவஸ்திரீகளிருவர் இலந்தைமரமாகியிருக்க காசிக்ஷேத்திரத்தில் வசிக்கும் வரதனென்னும் பிராமணன் கீதா நான்காமத்தியாயப் படனஞ்செய்யக்கேட்டு மரஜன்மம் நீங்கி அந்தணமங்கையராய்ப்பிறந்து அதே நான்காமத்தியாய சிரவணத்தினலே நித்தியவாழ்வை யெய்தினர்.

மத்வ தேசத்தின்கண் மஹா பாபியாய்த்திரிந்த அந்தணனெருவன் அவனது பாபச்செயல்களுக்காய் பருந்தாய்ப்பிறந்தும், அவனது மனைவி கெட்ட நடத்தையினல் கிளியாகியும், பூர்வ விரோதத்தினுல் சண்டையிட்டுக்கொண்டு ஒரு மண்டையோட்டு ஜலத்தில் விழுந்திறக்க, அந்த மண்டையோடு கீதையின் ஐந்தாமத்தியாயத்தை பாராயணஞ்செய்து ஞானமதியெய்திய ஒரு பிராமணனுடைய தாயினமையின் அந்தப் புண்ணியவிசேஷத்தினுலேயே இவ்விருவருக்கும் விஷ்ணுலோகஞ் சித்தித்தது.

கோதாவரிக்கரையிலுள்ள அபிஷ்ணிபுரத்தின் சானுசாரதியென்னுமரசன் அன்னப்பட்சிகளினுல் காஸ்மீரதேசத்து மணிபுரவாசியாகிய ரைக்முனிவரின் பிரபாவத்தைக் கேள்வியுற்று அவரைச் சேர்ந்து சரணடைய அவர் கீதையின் ஆறும் அத்தியாயத்தை உபதேசிக்க மோக்ஷமெய்தினன்.

பாடலிபுரத்தில் பார்ப்பனனுகிய சங்குகர்னனென்பவன் வியாபாரஞ்செய்து வெகு திரவியஞ் சம்பாதித்து புதைத்துவைத்து வரும்நாளில் சர்ப்பத்தினுல் கடிக்கப்பட்டு, பாம்புருவெய்தி யத்திரவியத்தைக் காத்திருக்குஞ்சமயம் தன் புத்திரர்கள் கனவிற்சென்று தனது நிலையை யவர்களுக்குணர்த்தியபடி யவர்களால் கீதா ஏழாமத்தியாயத்தை பாராயணஞ்செய்து பிராமணனுக்கு அன்னம் படைத்தலும், பாம்பாயிருந்த பிதா மோக்ஷத்தை யெய்தியதோடு புத்திரர்களுக்குத் திரவியமுங் கிடைத்தது.

ஆமர்த்தனபுரியில் பாபசன்மா வென்னும் பிராமணன் துஷ்டசெய்கையினிமித்தம் பனைமரமாயவதரித்து நிற்கையில், அவண்போந்த பிரமராக்ஷதஸ்திரீ புருஷாளுடைய சம்வாதத்தில் "பிரம்மம் என்பதென்ன? அத்யாத்மமென்பதென்ன வென்பதன் தாத்பர்யமாக ஆத்மஞானமென்பதென்ன அஞ்ஞான நிவர்த்தியென்பதென்ன"வென ஸ்திரீ வினவிய வாக்கியம் கீதை எட்டாமத்தியாயத்தின் முதற்சுலோகக் கருத்தாகவே சிரவணமாத்திரத்தால் பனைவடிவெய்திய பார்ப்பனன் அச்சென்மம் நீங்கி மீண்டும் அந்தணனுயவதரித்து அதேவாக்கிய தியானத்தினிமித்தம் மஹாவிஷ்ணுவே தோன்றி முத்தியளித்தார்.

வேடிக்கைக் கதைகள்.

தென்னாலிராமன் விகடனானது.

வட தேசத்திலே தென்னாலி என்று ஒரு பட்டணமுண்டு அப் பட்டணத்திலே ஓரேழைப் பிராம்மணனுக்கு ராமன் என்றொரு குமாரனிருந்தான். அவன் வடிவழகிலும் குணத்திலும் மிக்கவனா யிருப்பதைக் கண்ட ஒரு சன்னியாசி, அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து, "அப்பா! இம் மந்திரத்தை மூன்றுகோடிதரம் ஓர் இரவில் ஒரு காளி கோயிலிலே போயிருந்து ஜபித்தால், காளி ப்ரஸன்னையாகி, உனக்கு இஷ்டமான வரத்தை தந்தருள்வாள்" என்றார்.

ராமன் நல்லதென்று, அந்த ஸாது உபதேசித்த மந்திரத்தை வெகு பக்தியுடன் கிரகித்துக்கொண்டு. ஒருநாளிரவில் அவ்வூர்க் காளிகோயிலுக்குச் சென்று, மூன்றுகோடி உரு ஜபித்தான். உடனே பத்திரகாளி ஆயிரம் முகத்துடன் கத்தி, கேடகம், வில், வாள், கதை, தோமரம் முதலிய ஸகல ஆயுதங்களையும் ஏந்தி ப்ரஸன்னமானாள். ராமன் இயல்பிலே மிகவும் துணிவுடையவனாதலால், அந்தக் கோர ரூபியாகிய பத்திரகாளிக்குச் சிறிதும் அஞ்சாமல், நகைக்கத்தொடங்கினான். காளி, "அடா! பயலே! என்னுடைய அகோர ரூபத்தைக் கண்டு, தேவர்களும் அஞ்சியோட, நீ நகைசெய்தனையே. அவ்வாறு செய்வதற்கு என்னடா அபூர்வத்தைக் கண்டாய்?" என்று அதட்டிக் கேட்டாள்.

ராமன், "ஹே! லோகமாதா! ஒரு விண்ணப்பம்! தேவரீர் ஆயிரம் திருமுகங்களோடும், இரண்டு கைகளோடும் எனக்குக் காட்சி தந்திருக்கிறீர்கள். மனிதர்களாகிய எங்களுக்கு ஜலதோஷம் பிடித்துக் கொண்டால், ஒரு மூக்கை இரண்டு கைகளாலும் சிந்தக் கூடவில்லை. தாங்கள் ஆயிரம் மூக்கையும் ஜலதோஷம் பிடித்தகாலத்தில் இரண்டு கைகளைமாத்திரம் கொண்டு எப்படிச் சிந்தியிருப்பீர்கள்? சிந்தக் கூடாமல், மூக்கும் சளியுமாகக் கண்டோர் அருவருக்கத்தக்கவாறு நின்றிருப்பீர்களன்றோ? அதை நினைத்துக்கொண்டேன். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது" என்றான்.

உடனே காளி சிறிது கோபங்கொண்டு, "அடா! பயலே! என்னைக் கண்டு நீ விகடம் பண்ணினையாதலால், இன்றுமுதல் நீ விகடகவி யாகக்கடவாய்" என்றாள். அதற்கு ராமன், "ஓ! ஓ! நல்ல வரம் கொடுத்தீர்கள்! அப்படிப் பார்த்தாலும் விகடகவி, இப்படிப் பார்த்தாலும் விகடகவி" என்றான். காளி அவனுடைய வாக்சரியைக் குறித்து மெச்சி, "நீ ராஜஸபை புகழும்படியான சிறந்த விகடனாவாய். உனக்கு ஐசுவரியம் பெருகும்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனாள். அன்று முதல் அவன் விகடம் செய்வதில் வெகு ஸமர்த்தனாகி, தென்னாட்டிலே ராஜ்யபாரம் வகித்துவந்த சிறந்த ராஜாவான ராயரிடத்தில் ஆஸ்தான விதூஷகனாக அமர்ந்தான்.

சிறுவர்க்கான கதை.

வீரமுள்ள சிறுவன்.

கோடைகாலத்தில் ஒருநாள் காலை, வெயில் அழகாக வீசியது. ஒரு தையற்காரன் திறந்த ஜன்னல் ஒன்றின் சமீபத்தில் உட்கார்ந்து தன் வேலையைச் செய்துகொண்டிருந்தான். அவன் மிகவும் சிறுவன்; தன் சாப்பாட்டுக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டியவனா யிருந்தான். ஆனால் அவன் எப்பொழுதும் சந்தோஷ சித்தனாகவே இருந்தான்; தன் மனதுக்கு எது பிடிக்காவிட்டாலும் அதைப்பற்றி முணுமுணுக்கிறதில்லை.

அவன் ஒரு குடுத்துணியைத் தன்னால் எவ்வளவு அவசரமாகத் தைக்கக்கூடுமோ அவ்வளவு அவசரமாகத் தைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது தெருவில் ஒரு ஸ்திரீ "அப்பம் வேண்டுமா அப்பம்? நல்ல அப்பம்? சுடச்சுட இருக்கிறது! அப்பம் வாங்குவார் உண்டா, அப்பம்?" என்று கூவிக்கொண்டே போனாள்.

அந்த ஸ்திரீயின் குரல் தையற்காரச் சிறுவன் காதுக்கு நன்றாய் இருந்தது. ஆதலால் அவன் ஜன்னல் வழியாய்த் தலையே வெளியில் நீட்டி, "அம்மா! அம்மா! இங்கே வா அம்மா. அப்பம் விற்பதற்கு இதுதான் சரியான இடம், வா அம்மா இங்கே" என்று உரத்துக் கூப்பிட்டான்.

அந்த ஸ்திரீ மூன்று படிகளேறி தையற்காரன் கடை வாசற் கதவைத் தாண்டி, இவன் இருக்கும் இடத்திற்கு வந்தாள். அப்புறம் அவள் தன் தலைமேலிருந்த அப்பத் தட்டை இறக்கித் தையற்காரனுக்கு முன்னாக இருந்த ஒரு மேஜைமீது வைத்தாள்.

அப்பத்தைப் பார்க்கப் பார்க்க அந்தச் சிறுவனுக்கு வாயில் நீர் ஊறியது. அவன் ஒவ்வோர் அப்பமாகத் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். பிறகு ஒவ்வொன்றாய் எடுத்து வெளிச்சத்தில் உற்று உற்றுப் பார்த்தான். ஆனால், அந்தத் தட்டில் இருந்த பலவகையான அப்பங்களில் தனக்குப் பிரியமான அப்பம் எது, அதில் எவ்வளவு வாங்கலாமென்று இன்னும் நிச்சயித்தவனல்லன்.

கடைசியாக அவன் ஒருவகையான அப்பத்தை அந்த ஸ்திரீக்குக்காட்டி "அம்மா! இந்த வகையான அப்பம் இனிப்பாய் இருக்கும் போலிருக்கிறது. இதில் நல்லதாய்ப் பார்த்து ஒன்று எடுத்துக் கொடுப்பாயானால் உன் பேரைச் சொல்லிக்கொண்டு தின்பேன்" என்றான். சிறுவன் ஐந்தாறு அப்பங்களாவது வாங்குவான் என்று அப்பக்காரி எண்ணியிருந்தாள். அவன் ஒரேஒரு அப்பம் கேட்கவே, அவள் மனஞ் சலித்து, அவன் கேட்ட வகையில் ஒரு அப்பத்தை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டாள்.

(தொடரும்.)

அறிவுவிளக்கக் கதைகள்.

காகம், எலி, ஆமை, மான்—வேடனை வென்ற கதை.

கோதாவரிக் கரையில் இருக்கிற ஒரு பெரிய வன்னிமரத்தில் லகுபதனன் என்னுங் காகம் வாசஞ் செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் விடியற்காலத்தில் அங்கே எமனைப்போல் மிகவும் பயங்கரமான ஒரு வேடன் வந்தான். லகுபதனன் அவனைப்பார்த்து பயப்பட்டு "இந்தத் துராத்மா என்னபண்ணுவானோ தெரியவில்லை; ஆகையால் இதைச் சோதிக்கவேண்டும்" என்று, இரைதேடுகிற யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ்வேடன் வலையை விரித்து பலவகைப்பட்ட தானியங்களைத் தெளித்து, அங்கேயோர் செடி மறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தான்.

அதன்பிறகு தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவன் என்னும் புறு அரசு அங்கே இறைத்திருக்குந் தானியத்தைப் பார்த்து தன் பரிவார புறுக்களுடனே, 'இந்த நிர்மானுஷியமான காட்டில் தானியமெப்படி வரும்? யாராகிலுங் கொண்டுவந்து போட்டிருக்கவேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது; ஏனென்றால், ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியினால் எப்படி மரணமடைந்தானோ, அப்படி இஃது ஏதோ ஒரு விபரீதமாகத் தோற்றுகிறது' என்றது.

புறுக்கள் அதைக்கேட்டு "அதெப்படி? மஹாராஜாவே!" என, சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது:—

நான் தென்காட்டில் மேய்ந்துகொண்டிருக்கையிற் பார்த்தேன். அதைக் கேளுங்கள்;

ஒரு கிழப்புலி பலயீனத்தால் ஆகாரம் சம்பாதிக்கக்கூடாமல் ஓர் ஏரிகரையில் நீராடி, கையில் தருப்பையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான்.

புலி அவனைப்பார்த்து 'ஓ பிராமணா! இந்தப் பொன்காப்பைத் தருகிறேன் வா' என்றது.

இதைக்கேட்டு அந்தப் பிராமணன் 'இந்தக் காப்பு நமக்கு வலியக் கிடைக்கின்றது; ஆனால் மரணத்துக் கிடமாகிய புலியின் கிட்டப் போகலாகாது. ஆகையால் காப்பில் ஆசைவைக்கலாகாதென்போமானால், மரணத்துக்கு நாலண்டையும் வழி. ஆதலால் இதைக்குறித்துப் பிரயத்தனம் அவசியம் பண்ணவேண்டும்.' என்று இவ்விதமாகத் தன் துராசைக்கேற்பத் தனக்குள்ளே ஆலோசித்து நிச்சயித்துக்கொண்டு, புலியைப்பார்த்து, 'ஐயா புலியாரே! காப்பு எங்கே இருக்கிறது?' என்றான்.

புலி கையில் வைத்துக்கொண்டு 'இதோ பாரும், பிராமணோத்தமா!' எனக் காப்பைக் காண்பித்தது.

பிராமணன்: — 'உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை உண்டாகும்?'

(தொடரும்.)

ஸ்திரீகளுக்கான கதை.

பொறுமை கூடாது.

சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் வடக்கே ஒரு தேசத்தில் ஒரு ராஜா இருந்தார். அவருடைய அரண்மனை இந்திர சபைபோல வெகு அழகாயிருந்தது. ராணியின் அழகையும் குணத்தையும் வாயால் சொல்லமுடியாது. இவ்வளவு இருந்தும், பிள்ளையில்லாத குறையினால் அரசனும் அரசியும் வெகு வியசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கிறகாலத்தில் ஒருநாள் ராணி பரிமளம் நிறைந்த உத்தியானவனத்தில் உட்கார்ந்துகொண்டு, "அந்த கனகாம்புஜம் பூவைப்போல மேனியும், கறுத்த கண்ணும், நிறைய மயிரும், எல்லா வித லக்ஷணமும் கூடிய ஒருபெண், தெய்வ அனுக்கிரகத்தால், எனக்குப் பிறந்தால் எவ்வளவு பாக்கியசாலியாய் இருப்பேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். ஒரு தேவதை இந்த நினைவை அறிந்து, "இனி உனக்குக் கவலைவேண்டாம். உன் மனஸின் படியே ஒரு பெண் பிறப்பாள்; சந்தோஷமாயிரு" என்று சொன்னாள். ராணி இதைக்கேட்டு அதிக மகிழ்ச்சியடைந்து தேவதையை நமஸ்காரம் செய்தாள். வெகு சீக்கிரத்தில் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து, அதற்கு கனகாம்புஜம் என்று அவள் பெயரிட்டாள். நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாய்க் குழந்தை வளர்ந்தது.

இப்படி வெகு செல்வமாய்க் கனகாம்புஜம் வளர்ந்து வருகையில், ராணிச்கு இரண்டுநாள் விஷ ஜ்வரம் அடித்துத் திடீரென்று பரலோக கதியடைந்தாள். அந்த அம்மாளுடைய மரணத்துக்குப் பிறகு, தென் தேசத்தில் ஒரு சிற்றரசின் வெகு சௌந்தர்யமான ரூபமுள்ள குமாரத்தியை அரசன் விவாகம் செய்தான்.

அவள் படத்திலெழுதிப்பார்த்து ஆச்சரியப்படும்படியான அழகுள்ளவள் என்பதற்குச சந்தேகமில்லை. ஆனால் அழகு எவ்வளவு அதிகமோ, கர்வமும் அவ்வளவு ஜாஸ்திதான். ஐம்பத்தாறு தேசத்திலும் லக்ஷணத்தில் தனக்குச் சமானமில்லையென்று அவள் எண்ணி, ஒரு பெரிய நிலைக்கண்ணாடியைச் சுவரில் மாட்டி, அதனண்டை போய் அடிக்கடி பேசுவாள். அதுவும் திரும்ப உத்தரம் கொடுக்கும்.

ராணி: கண்ணாடியே, என்னைவிட அழகு ஸ்திரி எங்கேயாவது உண்டோ, சொல்.

கண்ணாடி: அழகான ராணி, உன்னைப்போல அழகுள்ளவள் பூமியிலேயே இல்லை.

(தொடரும்.)

பொதுக் கதைகள்.

லோபி.

ஒருகாலத்தில் மகாலோபி என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒருமகளைத்தவிர இதர பந்துக்களெல்லாம் இறந்து போனார்கள். அவளை எனக்குமட்டும் தெரியும். அவள் பெயரை நான் மறந்து அவளுக்கு கனகவல்லி என்ற காரணப்பெயர் கொடுத்து அழைக்கிறேன்.

உலகத்தில் பணப்பேய் பிடித்தவர்கள் எத்தனையோ பெயரிருந்திருப்பார்கள். எப்படி மேகத்துக்கு மேகத்தையும், சமுத்திரத்துக்குச் சமுத்திரத்தையும் உபமானமாகக் கூறமுடியுமோ, அதேமாதிரியே மகா லோபிக்குப் பணத்தாசையில் அவனே உபமானம். அவன் அரச சின்னமாகத்தரிக்கும் முடியின்மேல் அவனுக்கு இருந்த அபிமானத்துக்குக் காரணம் அது பொன்னாலாக்கப்பட்டிருப்பதே. வேறெந்த உலோகமாயிருந்தாலும் அதை அவன் பொருட்படுத்தான். மதிக்கவுமாட்டான். பொன்னுக்கு அடுத்தபடியில் அவனுக்குப் பிரியம் அவனது ஒரே பெண்ணாகிய கனகவல்லியிடமிருந்தது. அவனுக்கு அவளிடத்திருந்த வாஞ்சை எவ்வளவு அதிகரித்ததோ அதைவிடப் பன்மடங்கதிகமாகப் பொன்னிடத்தில் வாஞ்சை அதிகரித்தது அந்தோ! பேதை, இவன் தன் வாஞ்சைக்குரிய கண்மணிக்குத்தன்னாலியன்றதைச் செய்வது, அவனுக்குத் தனக்குப்பின் உலகத்திலெங்குமே இதுவரை சேர்த்து வைக்கப்படாத அவ்வளவு அளவிறந்த பொன் நாணயக்குவியலைச் சேர்த்துவைப்பதென்று கருதினான். அந்த நிமிஷமுதலே பொன் சேர்ப்பதென்று பிரதிக்ஞை செய்துகொண்டான். இராப்பகலாய் ஓய்வில்லாமல் அவன் தன் சிந்தனையையெல்லாம் இம்முயற்சியிலேயே கழித்தான்.

இப்பணப்பேய் இவனைப் பிடித்துக்கொண்டதுபோல் யாரையும் பிடித்ததில்லை இவன் வர வர மகாலோபியாய் நியாயம், நியமமென்று மில்லாதவனானான். பொன்னல்லாத பொருளைப் பார்க்கவே அவனுக்கு மனமில்லாமல் போய்விட்டது. தான் பார்ப்பதெல்லாம் பொன்னாயில்லையே யென ஏங்குவான். இதற்காக யோசனைசெய்து அந்தரங்கமான சுரங்கம் வெட்டி அதில் இருண்ட ஓரறையில் தன் பொன்னையெல்லாம் குவித்துவைத்து அதைப் பார்ப்பதினாலேயே ஏறக்குறைய நாள் முழுவதையும் கழிப்பான்.

(தொடரும்.)

பூனை நண்பன்.

முன் ஒருகாலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குக் குமாரர் மூவர். அம் மூவரிடத்தும் அழகும் தைரியமும் பெருந்தன்மையும் குடிகொண்டிருந்தன. அரசனுக்குக் கிழப்பருவம் வந்தது. ஆயினும் அரசாட்சியை விட அவனுக்கு மனமில்லை. குமாரர்கள் அவனிடத்திருந்து ராஜ்யத்தை அபகரிக்க எண்ணினர்களென்று அரண்மனையிலிருந்த துஷ்டர் சிலர் கட்டிவிட்டார்கள். அரசனும் அதனை நம்பினன்.

ஆகையினல், இந்தக் குமாரர்களை ராஜ்யத்தை விட்டுச் சிறிது காலத்திற்கு அப்புறப்படுத்தவேண்டி அரசன் ஒரு யுக்திசெய்தான். அவர்களைக் கூப்பிட்டு மிகவும் பக்ஷமாக, "என் அருமைப் பிள்ளைகளே, இதுவரை என் குடிகளைச் செவ்வையாக ஆண்டுவந்தது போல என்னல் இப்பொழுது ஆளக்கூடவில்லை. வயோதிகப்பருவம் வந்து என்னை வாட்டுகின்றது உங்களுக்குத் தெரியுமே. இதனல் தேசத்துக்குத் தீங்கு உண்டாகும். ஆகையால் உங்களுள் ஒருவன் தலைமேல் என் கிரீடத்தைச் சூட்ட விரும்புகிறேன். இப்படி நான் செய்வேனுயின், நீங்களும் எனக்காக ஒரு காரியம் செய்வது கிரமந்தானே.

ராஜ்யபாரத்தை ஒழித்தபிறகு நாட்டுப்புறத்தில்போய் வசிக்க வேண்டுமென்று எனக்கு அபேக்ஷையுண்டு. எனக்குத் துணையாக அழகான புத்தியுள்ள சிறிய நாயொன்று இருந்தால் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்! ஆகையினல், இன்றைத் தேதி முதல் ஒரு வருஷம் கழியுமுன்னே எந்தக் குமாரன் உருவத்தில் மற்றவைகளெல்லாவற்றையும் விடச் சிறியதாயும் அழகில் மற்றவைகளெல்லாவற்றையும்விடச் சிறந்ததாயுமுள்ள நாயைக் கொண்டுவந்து தருகிறனே, அவனுக்கு என் சிம்மாசனம் உரியதாகும்" என்று சொல்லினன்.

தகப்பனர் வார்த்தையைக் கேட்கவே, மூன்று குமாரர்களுக்கும் ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவென்றில்லை. ஆயினும் அவன் விரும்பியபடியே செய்ய அவர்கள் சம்மதித்தார்கள். அவனிடத்திலிருந்து ஏராளமான பணமும் விலையுயர்ந்த ஆபரணங்களும் வாங்கிக்கொண்டு விடைபெற்று, தாங்கள் கொண்டுவருவதாக வாக்களித்த நாயைத் தேடிப் பிரயாணமாயினர்.

(தொடரும்.)

வைத்திய விஷயம்.

சிசுக்களின் அகாலமரணத்தைத் தடுத்தல்.

இப் பூவுலகிற் பிறந்தோர் யாவரும் முதுமைப்பருவமடைந்த பின்னிறத்தலென்பதின்றி நடுவிலும் முதலிலும் மரிப்பது சகஜமாயிருக்கிறது. அவற்றுள்ளும் குழந்தைப்பருவத்தில் கூற்றுக்கிரையாவது அந்தோ! கொடிதினும் கொடிது. பன்னெடுநாட்கள் பற்பல விரதங்களிருந்தும் அரிதிற் றேடிய பொருளைச் செலவழித்தும் மிக்க பயபக்தியோடு தங்கள் தங்கள் இஷ்டதேவதைகளைச் சிந்தித்தும் அரிய தவங்கிடந்தும் இறைவனின் திருவருட்டுணையால் திங்கள் பத்துஞ் சுமந்து பெற்றெடுத்த பிள்ளையைப் பிரிவதென்றால் எவர்தான் மனம் துணிவர். அருமையான குழந்தைகளின் ஜனன மரண எண்ணிக்கையை சற்று ஆராயின் பின்னதே யதிகமாயிருக்கக் கூடும். அதிலும் அதன் காரணத்தைக் கூர்ந்துபார்க்கில், மாந்தத்தாலும் க்ஷயத்தாலும் இறக்கும் தொகையே அனந்தம் என்பது யாவரும் அறிந்ததோருண்மை. அக்கொடிய மாந்தமும் கட்டியும் உண்டாவதற்கு காரணம் பலவற்றுள்ளும் சில கீழ்விவரிக்கப்படுவனவாகும். இவைகள் சிசுக்களின் அகாலமரணத்தைத் தடுப்பதற்கு ஆஸ்பதமாயிருக்கின்றதென்று தற்கால நவீன நாகரீகசிகிச்சாதிகாரிகளும், புராதன ஆயுர்வேத சிகாமணிகளும் சித்த வைத்தியசிரோமணிகளும் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர் விஷயம் அனுபவத்திற்கும் ஒத்திருக்கிறது. அவையாவன:—

சரியானபருவம் அடையாத புருஷன் மங்கைப்பருவம் அடைந்த மாதைக்கூடுவதாலும், மங்கையர்கள் புஷ்பவதியாக சின்னாட்களுக்குள் சிற்றின்பம் அனுபவிப்பதாலும், பூரணகர்ப்பகாலத்தும் போகம் கொள்வதாலுங் குழந்தைகள் பிறந்த ஒருவருஷத்திற்குள் ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையாவதனால் தாய்க்குப் பால்கெட்டுப் புளிப்பேரியதில் அளவிறந்த கெடுதலுண்டாகும் கிருமிகள் ஜனித்து உண்ணும் குழந்தைகளின் வயிற்றிற்குள் சென்றதும், ஒன்று நூறாகி ஜீரணசக்தியைக் குறைத்துவிடுகிறது. விஷக் கிருமிகள் பரவப்பரவ அவ்வப்போது குடிக்கும் பாலை ஜீரணிக்கச்செய்யாது குடலிலேயே உறைத்துபோகும்படி செய்கிறது. இதனாலேயே குடல்புளிப்பு, அஜீரணம் முதலியன உண்டாகி மண்ணீரல் வீங்கி, சில குழந்தைகளுக்கு வயிறு பெருத்தும், சில குழந்தைகளுக்கு ஒரேபக்கத்தில் கட்டியுமுண்டாகிப் புரளுவதுமாயிருக்கிறது. அதைத்தான் சாதாரண ஜனங்களும் குழந்தை சவலையாய்ப் போய்விட்டதென்று சொல்லுவது. அம்மாதிரி குழந்தைகள் நூற்றுக்குப் பத்து தேர்வது கடினம். எவ்வளவோ இங்கிலீஷ் மருந்துகள் தமிழ் மருந்துகள் இதுவரை கொடுத்தும் பயன்காணாமல் விழலுக்கிறைத்த நீர்போலாய்விட்டது. இதனைத் தடுப்பதற்கு மேற்கூறிய கெடுதிகள் சம்பவிக்காமல் இனி நம்மவர்கள் கார்த்துக்கொள்ளப்பட்டால் நமது நாட்டில் சிசுக்களின் அகாலமரணத்தைத் தடுக்க ஏதுவாகுமென்பது திண்ணம்.

ஸ்திரீகள் விஷயம்.

பத்தினியரிலக்கணம்.

சகோதரிகளே !

உங்களுக்குச் சில விஷயங்கள் கூற முன்வந்து முதலில் உங்கள் முக்கியகடமையைக் கூறலாயினேன் அதை யநுசரித்து நீங்கள் நடந்துவந்தீர்களானால் இந்நிலவுலகம் உள்ளளவும் நம் முன்னோர்களாகிய சகோதரிகளின் பெயர் எவ்வண்ணம் பலராலும் போற்றப்படுகின்றதோ அதுபோலவே நீங்களும் பூதஜடம்பழிந்த பின்னரும் புகழுடம்புகொண்டு பூஜிதைகளினால் அலங்கரிக்கப்படுவீர்களென்பது திண்ணம்.

“கற்பு எனப்படுவது சொல்திறம்பாமை” என்னும் நீதிமொழிக்கிணங்க, மங்கையர் மணாளனுக் கடங்கியவள், சொல்லும்வகையொழுகுதலாம். பர்த்தாவின் பிரியம்போல் நடப்பவளையே பதிவிரதையெனப்படும், கணவனை கண்ணைப்போல் எண்ணிப் போற்ற வேண்டும். கணவன் பணிவிடைகளைக் களிப்புடன் புரியவேண்டும். கணவன்குறிப்பறிந்து ஒழுகுதலே எவற்றினும் சாலச்சிறந்ததாகும். கணவன் கல்வியறிவிலாதவனாயும், துஷ்டனாயினும், அழகற்றவனாயினும், வயோதிகனாயினும், வியாதியஸ்தனாயினும் சிறிதும் அவன்மாட்டு வெறுப்பு கொள்ளலாகாது. இதனாலேயே நமது மூதாட்டியும் ‘குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்’ என்று கூறினார். இஃதல்லாமல் முக்கியமாயிருக்கவேண்டிய அம்ஸம் குறிப்பறிதல் என்பது. இதைப் பெரியோர் “கொண்டவன் குறிப்பறிவாள் பெண்டாட்டி” யென்றார். அவனுக்கு ஏற்படும் கோபம் சந்தோஷம் இவைகளைக் குறிப்பினா லுணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். முக்கியமாய் ஸ்திரீகள் புருஷன் உண்டபின்பே தான் உண்ணவேண்டும். அவர் சயனித்தபின்பே சயனிக்கவேண்டும். சூரியோதயத்திற்கு முன் நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை முடித்து நெற்றியில் திலதமிட்டுக்கொண்டு தன் நாயகனை எழுப்ப வேண்டும். வேலையினின்றும் தன் நாயகன் வீடுநோக்கி வரும்சமயம் சந்தோஷப்படுத்தவேண்டும். கணவனின் விருப்பம் எதுவோ அதுவே நமது விருப்பமும் என்றெண்ணி நடக்கவேண்டும். “பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாது இருத்தல்” என்னும் முதுமொழியை யநுசரித்து கணவன் பேச்சுக்கு எதிர்த்துக்கூறுதல் கூடாது. கணவனுடைய குற்றங்களைப் பிறர்க்குச் சொல்லலாகாது. இதனையே “தூற்றும் பெண்டிர் கூற்று எனத்தடம்” என்பது. கணவனும் மனைவியும் உடலிரண்டும் உயிர் ஒன்றும்போல் வாழவேண்டும். எப்பொழுதும் நாயகனைப் பிரிந்திருக்கலாகாது. கணவன் வீட்டிலிருக்கும்போது நல்ல ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு இருக்கவேண்டும். கணவன் அனுமதியின் எங்கும் செல்லலாகாது. கணவனுக்குத் துன்பம் ஏற்பட்டால் தனக்கே ஏற்பட்டதாயெண்ணி யவர் துன்பத்தை யொழிக்க முயலவேண்டும்.

விகடக்கொத்துகள்.

உலகில் சுத்தமான மனிதர்களில்லையே யான் எவ்விதமாய் வருவேனென்று வருணபகவான் பூமியில் வருவதற்கு அச்சமுடைய வராயிருந்ததினுல் வாயுபகவான் சமாதானஞ்செய்து அழைத்து வந்து விருந்தோபசாரஞ் செய்தாரென ஆகாயத்தில் ஓர் வதந்தி உலாவிக்கொண்டிருக்கிறது.

பஞ்சத்திற்குப் பயந்து கஞ்சிக்கு காற்றுப்பறப்பவர்களே நாட்டுப்புரத்திற்கு வருவீர்கள். தான்யாதிகளை விதைத்துப் பயிரிட்டு ஜீவித்திருப்பீர்களென்று கலப்பைகள் சென்னையிலிருக்கும் பேறு பிரபுக்களுக்கு அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறதாம்.

ஒரு பிரபுவுக்கு பிராணன் போகும் சமயத்தில் அவருடைய மைந்தன் அருகில்வந்து உட்கார்ந்துகொண்டு மனவிசாரத்துடனே,

கலிவிருத்தம்.

ஊரைவஞ்சித் தநேகம் பொருள்களை
தீரமாகவே சேகரஞ் செய்தெமன்
ஊருக்கேகிடும் உத்தமத்தந்தையே
ஆரெனக்குத்துணை அவனியிலேத்துவீர்.

என, கண்ணீர்விடுத்து கதறிக்கதறிக் கடகடவென்று பூமியில் புரண்டழும்போது, வஞ்சகதந்தை பிரபு மைந்தன் கண்ணைத் துடைத்து, அடா மகனே! அழாதே பிழைக்கும் விதம் பூலோகத் தில் பலவித மிருந்தாலும் பணஞ்சேர்க்குந் தந்திரம் சொல்லுகின் றேன் கவனிப்பாய்,

கலிவிருத்தம்.

பெருத்த செல்வங்க ளெப்படி வருமெனின்
உருத்தும் உண்மையாய் உலாவிடில் வந்திடா
கருத்துண் மிஞ்சிடும் கபடமோசங்களை
பொருந்தியூரைப் புரட்டிடவேண்டுமே.

என்று மைந்தனுக்கு நல்லுபதேசஞ்செய்து நமலோகஞ் சென் ருராம். இப்படிப்பட்டவர்கள் உலகத்திலிருந்தால் ஊருக்குள் வறுமைதேவி வருவதற்கு மிகவும் ஆசைப்படுவாளென்று, வஞ்சக புராணத்தின் வதந்தி உலாவுகிறது.

ஒருவன் தனது பிள்ளையைப் பலநாளும் கஷ்டப்படுத்தாமலும் வித்யாசாலைக் கனுப்பாமலுமிருந்தான். ஏனென்றால், வாசித்தால் வாய்நோகுமோ வெனும் சந்தேகம் மேற்கொண்டிருந்ததுடன், கைத்தொழில் வேலைக்கு அனுப்பினால் சரீரம் நோகுமே யென பரிதாபத்துடனும், தனது வஞ்சக சமர்த்தினால் பலவிதமான டிஸ்கவுண்டு செய்தும் கடன்வாங்கியும் ஊரார்பணத்தை வசூலித்துப் பிள்ளையை வளர்த்து பெரியவனாகசெய்து கலியாணமுஞ் செய்துவிட்டு தான் கண்ணைமூடிக்கொள்ளும் காலமாய்விட்டதினால், வயதுமுதிர்ந்து வியாதிநேசர்கள் வந்து சூழ்ந்துகொள்ளவே தகப்பன் வெளியில்வர சக்தியின்றி படுக்கையே சமாதியென்று சாய்ந்துக்கொண்டு, மகனே இனிமேல் நீ என்னைக் காப்பாற்றவேணுமென்று வேண்டிக்கொண்டான். அருகிலிருப்பவரும், ஆம், ஆம், முன்னால், உன்னை தகப்பன் வளர்த்தான், பின்னால் பிள்ளையாய் நீயே தகப்பனைக் காப்பாற்றவேணுமென்று மத்தியஸ்தம் பேசினார்கள். பிள்ளைக்குக் கோபம்பிறந்து,

கட்டளைக்கலித்துறை.

அள்ளிக்கொடுத்திடும் செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும்பட்ட கடனுக்குமென்னைக் குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற நாளையிலே யென் றுடுச்கடக்கிப்
பள்ளிக்குவைத்திலனே தந்தையாகிய பாதகனே.

என்று மனவிகாரமாய்ச் சொன்னான். அவன் வார்த்தையைக் கேட்ட தகப்பன் சிரித்து,

எண்சீர்விருத்தம்.

கடன்பட்டு உடன்பட்டு உடம்பைத்தேற்றுக்
கடன்காரர் வந்துவிட்டால் தடியைத்தூக்கு
அடபயலே கடன்கொடுப்பா யென்றுகேட்டால்
அடித்துதைத்து இடுப்பொடிய நகத்திப்போடு
படபடென்றே போலீஸார் வந்துசூழ்ந்தால்
பல்லிளித்து குப்புறவே படுத்துக்கொள்ளு
அடகெடுவா யுந்தனுக்கே சொன்னதன்றி
அறிவுடையோர்க் கொருநாளும் பொருந்திடாதே.

(இன்னும் வரும்.)

பாலிகா சம்பாஷணை.

பள்ளிக்கூடத்திற்குப் போகும் சிறுபெண்களில் ஓர் பெண் நேரமாய்விட்டதென்று ஓடினாள். அந்தப்பெண்ணைப்பார்த்த பெண் கூட்டங்கள் பின்னால் ஓடிக்கொண்டே பரிகாசஞ் செய்யலானார்கள். அதன் விபரம்.

ஓடு ஓடு	என்ன ஓடு
வண்டோடு	என்ன வண்டு
பால் வண்டு	என்ன பால்
கள்ளிப் பால்	என்ன கள்ளி
சதுரைக் கள்ளி	என்ன சதுரை
நால் சதுரம்	என்ன நால்
நால் கால்	என்ன கால்
ஆட்டுக் கால்	என்ன ஆடு
வெள்ளாடு	என்ன வெள்ளை
துணி வெள்ளை	என்ன துணி
சாய துணி	என்ன சாயம்
கறுப்பு சாயம்	என்ன கறுப்பு
மிசி கறுப்பு	என்ன மிசி
இந்த மிசி.	

சந்தடி செய்யாமலே ஓடுறாள். ஓடுறாள்! ஓடுறாள்! ஓ! மிசி ஓடாதே.

(இன்னும் வரும்).

நூதன விஷயங்கள்.

கானகத்திலிருக்கும் பெண் புலிகளை குட்டியிலிருந்து கொண்டு வந்து தமது நாட்டின் வீட்டு மாட்டுகொட்டகையில் விட்டு வளர்த்துக்கொண்டு பசுவின்பாலையே கொடுத்துப் போஷித்து மாடுகளுக்குப்போடும் கொள்ளும், கடலையும், புல்லும் கொடுத்து வளர்த்து வந்தால், அந்தப் பெண்புலிக்கு சரியான வயதுவந்து எருதுகளின் சேர்க்கையினால் கன்று போட்டால், அந்த கன்று புலியைப்போல நிறமும், வீரத்தன்மையுமிருந்தாலும், சேர்க்கை வாசனையைப்போல சாதுவாயிருக்கும். அந்த பெண்புலியினிடத்திற் பசுவினிடமிருந்து பால் கறப்பதுபோலவே தேவையான பால் கறந்துகொள்ளலாம்.

கல்வியும் சாஸ்திரமும்.

வித்தைவிரும்பு யென்னும் அறிவானந்தபோதத்தை கவனிப் பதுவே சிரேஷ்டமாகும் ஒவ்வொருவரும், வித்தையென்றல். அறிவுக்கு ஆதாரமானவை யென கவனிக்கவேண்டும், ஆன்மாக்களுக்கு அறிவு ஆதாரம், அறிவுக்கு கல்வி ஆதாரம், ஆகையால் ஒவ்வொருவரும் கல்வியைக் கொஞ்சங்கொஞ்சமாய் மனதில் கிரகிக்கவேண்டும் ஒருவன் தனது வயிற்றுக்கு அன்னபதார்த்தம் செலுத்தி சரீரத்தை போஷிக்கும்விதமாக கல்வியினல் அறிவைச் சீர்திருத்தம்செய்து ஞானத்தை அதிகரிக்கச்செய்யவேண்டும், அதனல் அன்னபதார்த்தம், சரீரத்தை போஷிப்பதற்காக, எவ்விதமாகவோ வேளை வேளைக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் புசித்து சரீரத்தை போஷிக்கும் விதமாகவே அறிவை சுத்தம்செய்ய காலை மாலைகளில் தவருமல் கொஞ்சம் கொஞ்சமாக வாசித்துக்கொண்டே, அறிவுக்கு ஆதாரமான நூல்களை வாசித்துவரவேணும், அவ்விதமாய் வாசித்துவந்தால் தான் வித்யா சமர்த்தினல் பலவிதமாகிய ஆத்மலாபம் பெறக்கூடும். சிலருக்கு ஓர் சாஸ்திரத்தை கற்றுக்கொள்ள விரும்பினலும் இவ்விதமாகவே நாளுக்குநாள் கற்றுணரவேண்டும்.

விவசாயக் குறிப்புகள்.

மாமரம்.

மாங்கொட்டையை நன்றக உலர்த்தி மேலிருக்கும் நார் முதலியவை நீங்கியபின்பு, நல்ல சுத்தமான களிமண்பூமியில் நல்ல எருவிட்டு அந்த மாங்கொட்டை ஒன்றை நாட்டினல், அது நாற்பது நாளைக்குள் செடியாகும். அந்தச் செடியை கோழி, குருவி, காகம் சேதமாக்காதபடியே சுற்றிலும் முள்வேலி கட்டுக் காப்பாற்றினல் ஒருவருஷத்திற்குள் மரமாகிவிடும். காய்காய்த்தபிறகு, அந்தக் காய்களையும் எவரும் தொடாமலிருக்கும்படி செய்தால், மரத்திலே பழுத்து இனிமையாயிருக்கும். அந்த மாங்கனியைப் புசித்தால், சரீராரோக்கியமாயிருக்கும், இதனல் மந்தம், பேதி முதலான வியாதிகளணுகாது. இத்தகைய மாம்பழத்தின் வித்துகளை லேகியம் செய்து புசித்தால், உஷ்ணவியாதி தவிர்த்து பசி யதிகரிக்கும்படி செய்யும்.

விதைகளுக்குத் தகுந்த எரு.

வெள்ளாட்டின் சாணமும், பசுவின் சாணமும், ஒன்றாய்சேர்த்து பூமியில் பள்ளந்தோண்டி அச் சாணங்களைப்போட்டு புதைத்து மண்மூடிவிட்டால், ஏழாவதுநாள் மண்ணும் சாணியும் உறவாகி விடும், பிறகு எடுத்து வெய்யலில் உலர்த்தி புதிய சால்களில் போட்டுவைத்துக்கொண்டு கழனியிற் கொண்டுபோய் நாற்புரமும் தூவிவிட்டு, அதன்மேல் தானியாதிகள் விதைத்தால், மிகவும் விசேஷமாக வளர்ந்து செழுப்பாகும், ஆனால் அநேகருக்கு இவ் விஷயந் தெரியாது.

வில்வப்பிசின்.

அநேக மனிதர்களுக்கு வில்வப்பிசினியின் மர்மம் தெரியாது, ஆனால் வில்வப்பிசினியினால், அநேகவித வியாதிகளுக்கும் தகுந்த அவுஷதாதிகளும், லேக்கியவகைராக்களும் செய்வதற்காகும், ஆனால் வில்வப்பிசின் எடுக்கும் விபரமெவ்விதமென்றால், வில்வக்காயைப் பிளந்தாற்போல நாற்புரமும் கீறிவிட்டு அந்தக்காய்களுக்கும் கீழி லேயே ஓர் கண்ணாடிபாத்திரத்தை வைத்து அதி காலையிலெடுத்து, வெய்யலி லுலர்த்திவைத்துக்கொள்ளவேண்டும். இந்த சமயத்திலி லுலர்ந்ததென்று விட்டுவிடக்கூடாது. நன்றாக காயவேண்டும்.

கைத்தொழிலும், வியாபாரமும்.

தான்ய விளைவு.

உலகத்தில் ஜனங்களுக்கு முக்கியமானது அன்னவஸ்திரமே யாகும், இவைகளில் முதலாவது, அன்னசாரத்திற்காகவே தான்யா திகளை விதைத்துப் பயிராக்கும்விதத்தைக் கவனித்து, அதற்குத் தகுந்த எருவும், ஜலமும், போஷிப்பும் தந்து பயிராக்கவேண்டும். அவ்விதமாய் பயிராகிய தானியத்தை எந்த தேசத்தில் கிடைப்ப தரிதாயிருக்கின்றதோ அந்த தேசத்திற் கொண்டுபோய் விற்கிரயம் செய்தால் அதன் அருமைபெருமையை அந்த தேசத்தார் கவனித்து கிரயத்திற்கு வாங்கி புசித்து சுகமடைவதுடன் வியாபாரிக்கும் ஏராளமான பொருள்கிடைக்கும்.

வஸ்திரம் நெய்தல்.

பருத்தியை கொண்டுவந்து தகுந்தவிதமாய் மைமிஷினில் நூல் நூற்றுப் பிறகு அவைகட்கு கஞ்சிபோடவேண்டும். அவைகளை பாவாகசெய்து கைதறிகளில் போட்டு நெய்தால் அதனால் வஸ்திரங்களாகும், இவ்வளவு பிரயாசையுடன் நெய்த வஸ்திரங்களை எந்த தேசத்தில் ஜனத்திரள் அதிகமாக இருக்கின்றதோ அந்ததேசத்திற் கொண்டுபோய் விற்கிரயம் செய்தால் மிகவும் லாபத்துடன் திரவியம் சேகரித்துக்கொண்டுவரத்தகும்.

விநோதங்கள்.

ஜலத்தில் நீந்துவதின் காக்ஷி.

நமது இந்தியாவில் புராதனமாயுள்ள மனிதர்கள் திடகாத்திரமாகவும், சரீராரோக்கியமாயிருந்தனர். அதன் விபரம்:—முற்காலத்தின் மனிதர்கள் அதிகாலையில் ஆறு, குளம், மடுவு, ஏரி முதலானவைகளிலிறங்கி ஸ்நானஞ்செய்து நீந்துவதினால் அவயவாதிகளின் நரம்புகள் பலப்பட்டு சரீரபுஷ்டியாவதுண்டு, அதனால் அந்தக்காலங்களில், ஒவ்வொருவரும் திடகாத்திர தேஜஸமைந்தவர்களா யிருந்தார்கள். தற்சமயம், அவ்வித நீந்துந்தொழிலில்லாமையால் மனிதர்களுக்கு சரீரவன்மை யில்லாமலிருக்கின்றார்கள். ஆகையால் ஜலத்தில் நீந்துவதே சவுக்கியமாகும்.

ஜலத்தில் நீந்துவதின் விநோதம்.

ஆரம்பத்தில் ஒருவன் ஜலத்தில் நீந்துவதாயிருந்தால், தக்கையாகிய ஓர்வித பஞ்சினால் செய்த மெத்தையில், ரப்பர் போர்வையிட்டுத்தைத்து அதன்மேல் படுத்துக்கொண்டே ஜலத்தை இரண்டு கையினாலும் தள்ளிக்கொண்டேயிருப்பது, இரண்டு கால்களினாலும், பின்புரமாய் ஜலத்தை தள்ளிக்கொண்டே யிருந்தால்தான் குறிப்பித்த ஸ்தானத்திற்கே மனிதன் சயனித்துக்கொண்டிருக்கும் மெத்தை நகர்ந்துசெல்லும். இவ்விதம் பத்துநாள்வரையிலும் பழகிவந்தால் ஜலத்தில் நீந்தும்வித்தை சுலபமாய் கற்றுக்கொள்வதற்காகும்.

நோயில்லாதிருக்கும் மார்க்கம்.

மனிதர்களில், அநேகர் வியாதியால் சரீரம் கெட்டு பலஹீன ராகி அவுஷதாதிகளைப் புசித்து ஆகாரம் ஜீரணிக்காமல் மெலிந்து கஷ்டப்பட்டு ஆயுளை குறைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், நோயற்ற வாழ்வாயிருந்தால்தான் நீடித்த ஆயுளோடு வாழ்ந்திருப்பதற்காகும். அதற்காகவே ஒவ்வொருமனிதனும், அதிகாலையில் எழுந்தவுடனே, தன் வீட்டின் அருகாலேயாவது, தூரத்திலாவது இருக்கும் ஆறு, குளங்களில் ஒருமணிநேரம் நீந்திவிட்டுக் கரையில்வந்து அதன்பிறகு பல் துலக்கி வாய்கொப்பளித்து, பசுவின் பால் நன்றாய்க் காய்ந்தவுடனே தேயிலை பானத்தோடு உட்கொண்டால், தேகத்திலிருக்கும் நரம்புகளெல்லாம் பலப்பட்டு சுறுசுறுப்பு உண்டாக்கும். அதன்மேல் ஆகாராதிகளை தனக்கிசைந்தபடி புசித்து வாரத்திற்கொருமுறை அப்பியங்க ஸ்நானஞ்செய்தால் சரீராரோக்கியமும் ஜீரணசக்தியும் பொருந்தி சுகவாழ்வானந்தமா யிருப்பார்கள்.

தர்மம் தலைகார்க்கும்.

இது ஓர் பழமொழியென்றே ஜனங்கள் சொல்லுகிறார்கள் என்றாலும், ஓர் வாலிபன் தன்னிடம்வந்து யாசித்த ஓர் ஏழையானவனுக்குக் காசுகொடுத்தால் திருப்தியாகாதென்று அன்னங்கொடுப்பதற்கு தன் வீட்டிற்கழைத்துச்சென்றான். அவன் போனவுடனே அவனை, அடிப்பதற்காக வந்திருந்த பகைஞர் அவனைக்காணாமல், நாம் எவ்வளவோ தந்திரமாய் அவனை வரவழைத்து இங்ஙனமிருக்கும்படிசெய்தும், எவ்விதமாய்ப் போய்விட்டானோவென்று தேடிக்கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த ஓர் பிரயாணி இவர்கள் செய்த அநியாய ஆலோசனையும், ஏழையின் பசியைத் தணிக்கும் தன் வீட்டுக்கழைத்துச்சென்ற தருமகுணசாலியின் விஷயத்தை யோசித்துப்பார்த்து ஆச்சரியமடைந்தவனா யிருந்தான்.

தமிழகம்.

(வாரம் இருமுறைப் பதிப்பு.)

மலாய் நாட்டின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம் தமிழ்நாட்டிலிருந்து பினாங், சிங்கபூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய தொடுவாய்ப்பகுதிகளிலும், ஐக்கிய மலாய் நாடுகளிலும், சைகோன், சுமத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், பிஜி, முதலிய கீழ்தேசப் பகுதிகளிலும் குடியேறி வதியும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இஃது மலாய்நாடு, பிரஞ்சுகொச்சின் சீனா, நெதர்லாண்டு இண்டிஸ், பேநானியோ, இந்தியா, பர்மா, இலங்கை, நேட்டால் முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. கீழ்தேசப் பகுதிகளுக்கு இதன் வருட சந்தா, வெள்ளி 10.00. ஆறுமாதங்களுக்கு வெள்ளி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை, நேட்டால், கென்யா முதலிய மேல்நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்துரோட்டு, கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்.

தேசானுகூலன்.

இஃதொரு சிறந்த தமிழ்ப் பத்திரிகை வாரம் இருமுறை பினாங்கினின்று தேசீய ராஜீய விஷயங்களுடன் வெளிவருவது.. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப் படித்தறிந்துகொள்ள வேண்டுமென்றி எழுத வியலாது.

சந்தா விபரம்.

உள்ளூர் வெளியூர்கட்கு வருஷம் 1-க்கு ரிங்கி $ 10—0—0
அல்லது ரூபாய் 15—0—0
6 மாதத்துக்கு $ 5—5—0
அல்லது ரூபாய் 8—0—0

மானேஜர், தேசானுகூலன்,
பினாங்கு.

N. T. JEEVA & CO.,

No. 1/382, Mint Street, Sowcarpet Post, Madras.

N. T. ஜீவா அண்டு கோ.,

நெ. 1/382, தங்கசாலை தெருவு, சௌகார்பேட் போஸ்டு,

ம த ரா ஸ்.

அமெரிகன் பாகெட் வாச்.

3-வருஷம் உத்திரவாதம்.



இக்கெடியாரம் அமெரிகாதேசத்தில் பேர் போன கம்பெனியாரால் உயர்ந்தசாமான் களால் செய்யப்பட்டதும் 5 கெம்புகள் வைக்கப்பட்டதும், என்ன முறட்டுவேலை செய்தாலும் நெடுநாள் நிற்காமல் போகக் கூடியதும் கவர்ன்மெண்டு குண்டுக்கு வித்தியாசமில்லாமல் காலத்தை காட்டக்கூடியது.

இக்கெடியாரத்தின் விலை ரூபா. 5 0 0

டோனியன் ரிஸ்ட்லெட் கெடியாரம்.



தற்காலம் கையில்கட்டும் கெடியாரங்களில் செய்துவரும் விசித்திர வினோத கெடியாரங்களில் இக்கெடியாரம் வெகு வினோதமானது இதன் டயல் பீபாய்மாதிரி நிகளமாக இருக்கும் அதில் மணிகாட்டும் எண்கள் எழுதியிருப்பதால் பார்வைக்கு வெகு வினோதமாக இருக்கும் இது சரியான டைம் காட்டக்கூடியது நல்ல சாமான்களால் செய்து இதைப்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

இதன் விலை 1-க்கு 9—8—0

இதன் விலை சரசம் ! குணமதிகம் !



8-மூலை ரேடியம் கெடியாரம்.

இந்த கெடியாரம் ராத்திரி காலத்தில் மணிகாண்பிக்கக் கூடியாதும் இச்சமயம் இக்கெடியாரத்தை தான் அனேக ஜனங்கள் ஆவலுடன் அணிந்துக்கொள்ளுகிறார்கள். சங்கிலியுடன் ரூபா. 8

4 மூலை ரேடியம் வாட்சு விலை ரூபா. 7—8—0

கையில்கட்டும் ரேடியம் ரிஸ்டு வாச்.



இராத்திரிகாலத்தில் விளக்கு வெளிச்சமன்னியில் மணிபார்த்துக் கொள்ளக்கூடியதும் இதை கையில்தரித்துக் கொண்டால் வெகு அழகுள்ளதாகவும் காணப்படுகிறது.

இதன் விலை. மிகவும் சுலபம் ரூபா. 5—8—0

ரேடியமில்லாத சாதா வாச் விலை ரூபா. 5

ஜெண்டில்மென் பாக்கெட் வாச்

இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குசரியான காலத்தை காட்டக்கூடியது கனத்த கண்ணாடியால் மூடி போட்டதும் அதிகசிறிதும் பெறிது மில்லாமல் நடுத்தர அளவுள்ளதும்உயர்ந்த ஜெர்மன் வெள்ளியினால் செய்ததும் பின்பக்கம் பூவேலை செய்த கெடியாரம்.

விலை ரூபா. 5—0—0

நிக்கல் ஹண்டிங் கெடியாரம்



இக்கெடியாரம் இரண்டுபக்கம் மூடியுள்ளதும் அழகான பூவேலைகள் இரண்டுபக்கம் செய்யப்பட்டதும் நீண்டநாள் உழைக்கக்கூடியதும் தலைசாவியுள்ள கெடியாரம் விலை ரூபா. 8-8-0

நரைமயிர்கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலகம்பெனிகளில் செய்து விற்கப்படுகிற நரைமயிர்தைலங்கள் நரைத்த மயிர்களை கருக்கச்செய்யாமல் விகாரப்படுத்தி விடுகிறது. நமது தைலமோ நரைத்தமயிர்களுக்கு பூசின 5 நிமிஷத்தில் கருமை நிரமாக்கி வருவதுமன்றி மறுபடியும் முளைக்கும் நரைத்த மயிர்களெல்லாம் கருமையாகவே முளைக்கும் நமது தைலத்தை டாக்டர்களும் வியாபாரிகளும் மொத்தமாக வரவழைத்து விற்கிறார்கள். ஒரு தரம் நமது தைலத்தை உபயோகித்தபின் பிறகு தாங்களே அநேகருக்கு இதன் குணத்தை தெரியப்படுத்துவீர்களென்று நம்புகிறேன்.

பிரஷ்வுள்பட புட்டி 1-க்கு விலே ரூபா 1—0—0

முந்துங்கள்! முந்துங்கள்!!

அமெரிக்கன் எலக்டிரிக் காரட்கோல்ட் மோதிரங்கள்.

இஷ்டமான ரகத்தை பெற்றுக்கொள்ளலாம். இவ்வழகிய மோதிரங்களில் வெள்ளை, பச்சை, நீலம், சிகப்பு, கோமேதகம், வைடூரியம் என்னும் இமிடேஷன்கற்களைபுதைத்து பலவித சித்திரங்களுடன் படத்தில் காட்டியபடி தயார் செய்து ஜர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றது

மோதிரம் 1-க்கு ரூபா 2-0-0

மோதிரம் 3-க்கு ரூபா 5—8—0

ஜலதரங்கம் என்னும் சங்கீதவாத்திய பெட்டி.

பெரியவர்களும் சிறியவர்களும் சங்கீதம் கற்றுக்கொள்வதற்கு இதுஓர் ஏற்றகருவியாகும் ஜலதரங்கம் வாசிப்பதுபோல் இதை அருமையாக வாசிக்கலாம் விலே வெகு சுலபம்.

பெட்டி 1-க்கு 1—0—0

கிராப்கட்டர் என்னும் தலைமயிர் கத்திரிக்கு கத்திரி.



இதைக்கொண்டு தலைரோமத்தை ஏறக்குறைவு இல்லாமல் மிக சுளுவாகவும் மட்டமாகவும் கத்தரித்துக்கொள்ளலாம் பார்வைக்கு மிக அழகாகவும் இருக்கும்.

இதன் விலை ரூபா 3.

அமெரிகன் போட்டோசிறுப் மோதிரம்.



இம்மோதிரத்தின் சிறு துவாரத்தில் பார்த்தால் கிருஷ்ணன், காளி. ஈஸ்வரன் பிரம்மா, எமன், காசி, ஜெகன்னாதம் முதலியது காணப்படுகின்றன இதை ஸ்ரீ, புருஷர்கள் கையில் அணிந்துக்கொண்டால் லக்ஷிமீகரமும் முகதேஜசும் உண்டாகும். மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 0 0

ஒரே தடவையில் 3-மோதிரம் வாங்கினால் விலை ரூபா 2—0—0.

நாலுபில்லை மூக்குக் கண்ணாடி

இதை உபயோகிப்பதால் வெய்யலில் உபத்திரவம் இல்லாமலும் கண்களுக்கு தூசிமண் முதலியதும் பட்டாலும் கண்கள் சுத்தமாயிருக்கும் இதன்கம்பிகள் எப்பொழுதும் வெள்ளியைப்போல் வெண்மையாயிருக்கும் இதில் பச்சை ஊதா சாம்பல் நிறம் முதலியதும் உண்டு பக்கம் 1-க்கு 2 பில்லையுள்ளது.

நாலுபில்லை மூக்குக்கண்ணாடி விலை ரூபா 1—4—0

மேகவர்ணமுள்ள குளிர்ச்சி ஒஸ்தி கண்ணாடி விலை ரூபா 3—0—0

இராஜஸ் க்ஷவரக்கத்தி.



இதைவைத்துக்கொண்டு க்ஷவரக்காலத்தில் நாவிதனிடம் கொடுத்து க்ஷவரம் செய்துகொள்ளலாம் அன்னியர்களுடைய சொரி சிரங்கு புண் சுண்டு முதலியவை வராமல் தலை எரிச்சலில்லாமல் சுகமாயிருக்கும். சீமை மேகர் நல்லமாதிரி கத்தி 2—0—0

2 நெ க்ஷவரக்கத்தி 1-க்கு விலை ரூபா 1—8—0

நாடார்குல மித்திரன்.

மாதம் மும்முறைப் பதிப்பு.

இது தென்னிந்தியாவில் உலாவிவரும் முக்கிய தமிழ் பத்திரிகைகளில் ஒன்று. இது பிரதி இங்கிலீஷ்மாதம் 1, 11, 21 தேதிகள் தோறும், அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்கசபையினின்று வெளிவரும்.

இது வியாபார விருத்திக்குரிய விஷயங்கள், விவசாய நுட்பம், கைத்தொழில் குறிப்பு அங்கியநாட்டு வர்த்தமானம், பொதுச் சமாச்சாரம், இராஜாங்க முறை முதலிய அரிய பெரிய விஷயங்களுடனும் வெளிவருவதோடு, இந்திய க்ஷத்திரயகுல பாண்டிய நாடார்களின் அபிவிருத்தியையே பிரதானமாகக்கொண்டு, தமிழில் பூரணபாண்டித்யம் பெற்ற சகோதர சகோதரிகள் எழுதும் அருமையான விஷயங்களை யும், அங்கத்திற்கூடி மாணவ மாணவிகளுக்கும், நன்மதி புகட்டும் தன்மையுள்ளது.

சந்தா விபரம்.

உள் நாட்டிற்கு .... ரு. 3—8—0
வெளி நாட்டிற்கு .... ரு. 4—0—0

சூ. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.

பணம்.

திருச்சிணுப்பள்ளியினின்றும் 1, 9, 22 முதல்
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவந்துலாவும் தெள்ளியதமிழ்
வாரவர்த்தமானி.

வாரந்தோறும் வெளியாவது. தேசநன்மையையே நாடி எழுதப்படுவது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்தது. எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம் படிக்கப்படிக்க விஷய மறிவதறின் பேரானந்தமும் பெருகும்.

வருட சந்தா ரூ. 5—0—0

மானேஜர் "பணம்" ஆபீஸ்,
திருச்சி.

அயக்காந்த திராவகம்.

இரும்பைப் பார்க்கிலும் கடினமான உலோகம் வேறொன்றுமில்லை. தேக விர்த்திக்கு இதுவே சிறந்தது. இதனால் தான் இளைத்தவன் இரும்பைத்தின்றால் கொழுத்தவன் பொன்னைத்தின்பான்என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவன் இந்த திராவகத்தை சாப்பிடுவதற்குமுன் தன்தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்திக்கொண்டு அதன்பின் இந்த திராவகத்தை ஒரு மண்டலம் 40-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்து பார்ப்பானானால் ஏறக்குறைய முன்னிருந்ததற்கதிக நிறை இருப்பான். இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக்கொள்ளலாம். தேகவிர்த்தி இல்லாதவன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதை ஜலத்தில் துவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் நல்லபலம் உண்டாகுமென்று வைத்தியசாஸ்திரங்கள் கூறுகின்றன. அதற்கே அந்த குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும் காந்தத்தினுடையவும் சத்தை திராவகமாக இரக்கியிருக்கும் இந்த பரமௌஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம் வஜ்ர சரீரம் போலாய்விடுமென்பதற்கு என்ன தடை.

20-நாளைக்கு சாப்பிடக்கூடிய ஒருபுட்டியின் ரூபா 2
40-நாளைக்கு சாப்பிடக்கூடிய புட்டி 3-8-0

இங்கிலீஸ் டாக்டர்களால் கண்டு பிடிக்கப்பட்ட

சிட்டுக்குருவி சத்தின் லேக்கியம்.

திரேகத்திலுள்ள சர்வ நரம்புகளுக்கும் பலம் கொடுக்கக்கூடியதும் எவ்வித நோய்களையும் ஆச்சரியகரமாய் சொஸ்தப்படுத்தக் கூடியதுமான உயர்ந்த அவுடதம்.

நமது தேசத்தில் அநேகமாய் துர்பல முடையவர்களாகவும் நடக்கச் சத்தியற்றவர்களாகவும் எத்தொழில்களிலும் பிரவேசிக்க பிரியமற்றவர்களாயும் வருந்துகின்றவர்கள் இந்த சிட்டுக்குருவி லேக்கியத்தை கச்சக்காய் பிரமாணம் காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டுவந்தால் பலகாரணங்களிலும் நஷ்டமடைந்த நரம்புகளின் அசத்தியை அடியோடு போக்கி இராஜ கருவிகளின் நரம்புகளை அதிக பலப்படுத்தி தாதுபுஷ்டியை உண்டாக்குமென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. பத்தியமில்லை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். ஒரு சேர் லேக்கியம் விலை ரூபா 2—8—0

அமைகோ என்னும் நூதன பயாஸ்கோப் பெட்டி

இந்த "அமைகோ" ஜெர்மனியில் தயார் செய்தது இதில் ஜெர்மனியின் தர்பார் பார்லிமெண்ட் சபையில் ஒருவருக்கொருவர் தக்கம் செய்து பேசுவது, இங்கிலாந்தின் பெரிய அரண்மனைகள் காங்கிரஸ் சபை, லார்ட்சபை,குதிரைப் பட்டாளம், பீரங்கி பட்டாளம் ஆகாய விமளம், பட்டாளம் முதலியவை காபாத் செய்வது, தொழிற்சாலைகளின் கட்சி, மிருகஜந்துக்கள் சர்க்கஸ் ஆடுவது குதிரை மோட்டார் பந்தயங்கள் இதுவுமல்லாமல் கீர்த்தி வாய்ந்த ஐரோப்பியஸ்கீரீ புருஷர் டிராமா ஆக்டர்கள் ஆக்ட்செய்த ஆட்டங்களையும் பெரிய பயாஸ்கோப் கம்பெனியில் காணுவதைப் போல் இரவிலும் பகலிலும் பார்கலாம்.

40 பல கலர் தந்த போட்டோ பிலிம்சுகளும் சேர்ந்து லென்சசள் உள்பட கம்பிலீட் செட் 1-க்கு ரூபாய் 1.

பட்டு அங்கவஸ்திரங்கள்

இவைகள் மிக நேர்த்தியான பளபளப்புள்ள பட்டினால் செய்தது இவைகளை ஆண்பிள்ளைகள் மேல்போடும் துப்பட்டாக்களாகவும் ஸ்ரீகள் மேலாக்காகவும் சிறுபிள்ளைகள் தாவணியாகவும் உபயோகிக்கலாம், இதில் ரோஸ், பச்சை சிகப்பு, நீலம், மஞ்சள் வெள்ளை மேக வர்னம் வெங்காயப்புரை வர்னம் கத்திரிப்பூவர்னம் முதலிய அநேக வர்னங்கள் உண்டு 5½ முழம் நீளமும் 2½ முழம் அகலமும் உள்ள பட்டு துப்பட்டா அழகிய கரையுடன் கிடைக்கும்.

குட்டை 1-க்கு விலை	ரூ.	3	4	0
3-குட்டையின் விலை	ரூ.	10	0	0
12-குட்டையின் விலை	ரூ.	36	0	0

உங்களுக்கு.

சுயராஜ்யம் வேண்டுமா ?
சுதந்திர தாகம் உண்டா ?
அரசியல் விஷயமறிய வேண்டுமா ?
காங்கிரஸ் விஷயம் தெரியவேண்டுமா ?
சமூக நிர்மாணம் தேவையா ?
பாஷாபி விருத்தி விருப்பமா ?
பண்டைச் சரித்திரம் படிக்கவேண்டுமா ?
கல்வி சுகாதாரம் வியாபாரம் தொழில்
அபிவிருத்தி தேவையா ?
உலக அறிவு வேண்டுமா ?
மதப்படிப்பு அவசியமா ?
ஸமரஸம் விருப்பமா ?

தஞ்சாவூர் ஸமரஸபோதினி எல்லாவற்றையும் போதிக்கும்.

வருஷ சந்தா உள்நாடு .... ரூ 7—0—0
வெளிநாடு ... . ரூ. 9—0—0

உடனே எழுதுங்கள்.

மானேஜர், ஸமரஸபோதினி,
தஞ்சாவூர்.

தேசோபகாரி.

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து ஞாயிறு தோறும் வெளிவரும் ஒரு சிறந்த வாரப்பத்திரிகை. சித்திரப் படங்களுடன் திகழ்வது. அரிய வியாசங்களைக்கொண்டது. தமிழர்களின் பொதுநலத்திற்காக உழைப்பது.

வருஷ சந்தா.
உள்ளூருக்கு ரூ. 5—0—0
வெளியூருக்கு ரூ. 6—0—0

பத்திராதிபர், தேசோபகாரி,
ரங்கூன்.

எலக்ட்ரிக் பாகெட் விளக்குகள்.

பாக்கெட்லாம்பு, லெதரட் கவர்போடி கம்பிளீட் வித் பாட்டரி, மெட்டல் பிலமெண்ட் பல்புடன் உபயோகிக்கக்கூடியது

விலை ரூ.	2	8	0
,, கோல்டு பிராஞ்சு பாடி	3	0	0
,, லெதர் கவர்டு பாடி	3	8	0
,, ரவுண்டு லென்ஸ்	2	12	0
,, புல்ஸ் ஹை லென்ஸ்	2	12	0
1½ அங்குல புல்ஸ் எனாமல்	2	14	0
1¾ ,, ,,	3	0	0
1½ அங்குல பவர்புல் பகூசிங் லென்ஸ் லெதர் போட்டது	3	8	0
1¼ ,, ஓவல் லென்ஸ் பேடன்ட் பக்கம்	4	0	0
,, 3 கலர் லென்ஸ் தோல்கவர் போட்டது	3	8	0
,, லென்ஸ் இல்லாமல் பித்தளையினால் நிக்கல் பாலிஷ்கொடுத்து சிகரேட் கேஸ் மாதிரி	4	0	0

எலக்ட்ரிக் கைவிளக்குகள்.

இதனடியில் காண்பித்திருக்கும் விளக்குகள் அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும் எலக்டிரிக் விளக்கைப்போல் பாட்டரினால் செய்யப்பட்டது பாக்கெட்டிலும் போட்டுக் கொள்ளலாம் இராக்காலத்தில் பயங்கரமான காட்டுமார்க்கமாய் போகும்போது எதாவது அபாயம் நேரிடும்போது விளக்கை எத்திக்கொள்ளலாம். விளக்குவேண்டுமானால் விளக்கின்மேலிருக்கும் பட்டனை அழுத்தினால் விளக்கெறியும்.

கைவிளக்கு 60 அடி நீளம் வெளிச்சம் காட்டகூடியது	6	0	0
பேடன்ஸ் சுச்சி புல்ஸ் ஐ லென்ஸ் கண்ணாடிபோட்டது	5	0	0
ஓவல் லென்ஸ் போட்டது	4	0	0
மெட்டாலம் டேபில் லாம்பு	4	8	0
சிக்னல் லாம்பு சிகப்பு வெள்ளை பச்சை ஜர்மனி மேக்கர்	4	8	0
,, ,, ஜப்பான் மேக்கர்	3	8	0
டார்ச்சுலைட்டுகள் 60அடி நீளம்வெளிச்சம்தரக்கூடியது	8	0	0
எவிசின்ஸ் ரிகார்டு பாட்டரி மிகவும் பெயர்பெற்றது	1	0	0
எவர் ரெடி பாட்டரி	0	14	0
சுப்ரீம் பாட்டரி 1-க்கு	0	10	0
தனி ஆஸ்டிராம் பல்பு 1-க்கு	0	12	0
சாதாரண பல்பு எஸ்பிலிமெண்டு 3, 5, வெளிச்சம் உள்ள	0	8	0

தனி பாட்டரி 1-க்கு அணா 12. தனி பல்பு அணா 6.

N. T. ஜீவா & கோ., 1-382, சௌகார்பேட், மதராஸ்.

நவசக்தி.

(தமிழ் வாரப்பதிப்பு.)

பத்திரிகாசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

இப்பத்திரிகையில் ஜனநாயக முறை, தொழிலாளர் இயக்கம், கைத்தொழில் வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, தேசபக்தி யூட்டக்கூடிய வேறு பல விஷயங்கள் எழுதப் பட்டு வருகின்றன.

சந்தா விபரம்.

வருஷ சந்தா .... ரூ. 5—0—0

ஆறுமாத சந்தா .... ரூ. 3—0—0

பினங், சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 6

மாதிரி காபி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர் "நவசக்தி" ஆபீஸ்,

44, பஜார் ரோட், இராயப்பேட்டை, சென்னை.

எலக்டிரிக் பௌண்டன் லாம்பு.

எலக்டிரிக் பௌண்டன்

லாம்பு 1-க்கு 4 0 0

N. T, ஜீவா அண்டு கோ., 1-382, சௌகார்பேட்டை மதராஸ்.

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ 1—0—0 வெளிநாட்டிற்கு ரூ 1—8—0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம் இராஜங்க ஜனங்க சீர்திருத்தங்கள் நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர், "கற்பகம்" ஆபீஸ், புதுவை.

ரோல்ட் கோல்ட் மங்களூர் கை வளையல்கள்.



இது பளபளப்பான ரோல்ட் கோல்ட் இமிடேஷன் பொன்னினால் பலமாதிரிப இலைகொடிகள் ஒன்றோடொன்று பின்னியது போல வெகு அழகாயும், வேலைத்திரமாயும் செய்யப்பட்டு சீமையிலிருந்து வந்திருக்கிறது இதைபார்பவர்கள் பொன்னால் செய்த கைவளையல் என்றே எண்ணுவார்கள் எப்பொதும் கருக்காமல் இருக்கும் இது எல்லா மதஸதர்களும், பெரியோர்களும் சிறியோர்களும் அணிந்துக்கொள்ளலாம்.

ஜதை 1-க்கு ரூபா 2—0—0. தபால்சிலவு அணா 4.

இரண்டு ஜதைகள் வாங்கினால் தபால்செலவு இனாம்.

அமெரிக்கன் கோல்டு பாலிஷ் போடப்பட்ட 50 செஜஜைகள் சட்டின ஒட்டியாணம் 1-க்கு ரூபா. 5—0—0

60 காசு அடங்கிய கம்பியால் பின்னப்பட்ட காசிமாலை	1-க்கு	ரூ. 6
கழுத்து கண்டி	,,	ரூ. 3
நெக்லேஸ்	,,	ரூ. 3
ஒத்தைப் பட்டைச் சரடு	,,	ரூ. 3

ரூபா 500 மதிப்பிடக்கூடிய
ரோல்டு கோல்டு இமிடேஷன்
டைமண்டு கம்மல் ரூபா 3.



இக்கம்மல்கள் ரோல்ட் கோல்டினால் செய்து இமிடேஷன் வைர வெள்ளை கற்கள் ஏழு பதித்து அதிக வேலைப்பாட்டுடன் தற்கால நாகரீகத்திற்கேற்றபடி தயாரிக்கப்பட்டது. இக்கற்களின் பிரகாசமும் ஜொலிஜொலிப்பு அசல் வைரம் போலவே இருக்கும் இதைப் பார்ப்பவர்கள் வைரமென்றே நினைப்பார்கள். இங்கிலீஷ் இமிடேஷன் டைமண்டு ஆனதினால் இக்கற்களின் நிறம் மாறுவதே கிடையாது.

கம்மல் ஜதை 1-க்கு பெட்டியுடன் ரூபா 3.

ரோல்ட் இமிடேஷன் டைமண்டு மோதிரம் 1-க்கு ரூபா 1—8—0.

கடுக்கன்கள்.

இங்கிலீஷ் ரோல்ட் கோல்டில் செய்யப்பட்டு உயர்ந்த பாலீஷ் கொடுக்கப்பட்டதும் அழகான இமிடேஷன் கல் பதிப்பிக்கப்பட்டதும் ஜனங்கள் ரூபா 50-க்கு மதிப்பிடக்கூடியதுமானது.

கடுக்கன் ஜதை 1-க்கு ரூபா 1—4—0.

N. T. ஜீவா & கோ.,
1-382, தங்கசாலை தெருவு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

எலக்ட்ரோ கோல்ட் பிளேட் 8 மூலை ரிஸ்டு வாச்.

இக்கெடியாரத்தின் கேசும் பிராஸ்லட்டும் எலக்ட்ரோ கோல்டினல் செய்யப்பட்டு பார்வைக்கு வெகு சுந்தரமாயும் படத்தில் காட்டியதைப்போல் இருக்கும் இக்கெடியாரம் அமெரிக்காவில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டது ஒவ்வொரு கெடியாரமும் நேரில் பார்வை செய்து அனுப்பப்படும். பிராஸ்லெட்டுடன் ரூ. 780

வெள்ளி கெடியாரம் ரூ. 880 நிக்கல் கேஸ் ரூ. 6-80

ரேடியம் வேண்டுமானல் ரூ. 1-8-0 அதிகம் சார்ஜ் செய்யப்படும்

வெகு மலிவு! சீக்கிரம் முந்துங்கள்!

கையில் அழுத்தும் ஸ்பிரிங் விசிறி.

இவ்விசிறியானது சபசாரியங்களிலும் பொதுஜன கூடங்களிலும் பெட்ரூம்முதலியசாற்று வசதியில்லாமல் கஷ்டப்படும் காலத்திலும் இதை பெரியவிரலில் அழுத்தினல் சுழன்று மனத்திற்கு ஆனந்தப்பரவச காற்று தருவது இதுவே. விலை. 1க்கு ரூபா 3-0-0

$\frac{1}{4}$ டஜன் அல்லது 3 விசிறி விலை ரூபா 8 8 0

விலாசம்:—N. T. ஜீவா அண்டு கம்பெனி,
1-382, தங்கசாலை தெரு, சென்னை.

இந்திரிய வீரன்.

விலைமாதர்கள் இடம் காதல்கொள்ளும் புருஷர்கள் மேற்படி மருந்தை உபயோகித்துக்கொண்டு, ஸ்திரி இன்பம் செய்வாராகில் இந்திரியம் ஸ்கலிதமாகாமல் நெடுநேரம்வரையில் லீலா இன்பத்தை தரக்கூடியது. ஷை மருந்து உபயோகிக்கும் விபரங்கள், மருந்துடன் அனுப்பப்படும்.

24 மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 2—8—0
12 மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1—4—0

விலாசம்:—சாரதா அண்டு கம்பெனி.,
நெ. 13, பிரைசர் சாமிமுதலி தெருவு, சௌகார்பேட், மதராஸ்.

சிற்றின்பத்தின் ரப்பர் கருவி.

காமநோயின் பயத்தால் சண்தெரியாமல் பற்பல கலவிசெய்து பயங்கரமான மேகநோய்களைச் சம்பாதித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். அழகுள்ள ஸ்திரீயிடம் போக இச்சையிருந்தால் அவளிடம் கெட்டநோய் இருப்பதாக தெரிந்தால் மேற்படி கருவியை உபயோகப்படுத்திக்கொண்டு தடையின்றி போகிக்கலாம். அந்நோய் அணுகாதென்பது திண்ணம்.

கருவி 1-க்கு ரூபா 1—4—0 கருவி 3-க்கு ரூபா 3—8—0

விலாசம்—எம். லீலா அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை, மதராஸ்.